12.01.16

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கரும்பு டன்னுக்கு ரூ.2,850 முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு



கரும்பு டன்னுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள ரூ.2,300 உடன், ரூ.550 சேர்த்து ரூ.2,850 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு நிர்ணயம் செய்யும் நியாயமான, ஆதாய விலையைவிட உயர் அளவில் பரிந்துரை விலையை தமிழக அரசு நிர்ணயம் செய்துவருகிறது. இந்த நிலையில், 2015-16-ஆம் ஆண்டுக்கான கரும்பு பருவத்துக்கு டன்னுக்கு ரூ.2,300 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. விவசாயிகளின் நலன் கருதி, மாநில அரசின் பரிந்துரை விலையாக போக்குவரத்துச் செலவு ரூ.100 உள்பட ரூ.550-ஐ உயர்த்தி வழங்க முதல்வர் ஜெயலலிதா திங்கள்கிழமை உத்தரவிட்டுள்ளார். இதனால் விவசாயிகளுக்கு நடப்பு

கரும்புப் பருவத்தில் டன்னுக்கு ரூ.2,850 கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கரும்பு மகசூல் திறனில் முதலிடத்தில் தமிழகம்: கரும்பு மகசூல் திறனில் நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. கரும்பு உற்பத்தித் திறனை அதிகரித்து, கரும்பு உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும், சர்க்கரை ஆலைகள் முழு அரைவைத் திறனை அடையும் வகையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நிழல்வலைக் கூடத்தில் நாற்றுகள் உற்பத்தி செய்தல், பாசன நீர், உரங்களை திறனுடன் பயன்படுத்துதல், நுண்ணீர் பாசனத்தின் மூலம் உரமிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நுண்ணீர் பாசன உபகரணங்களுக்கென சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் தமிழகம் முன்னிலையில் உள்ளது என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**சிறு தானியங்களின் பெரும் பலன்கள்**

மக்களின் இன்றைய உணவு முறை இயற்கைக்கு மாறானதாக உள்ளது. செயற்கை உணவுகளால் மனித உடலுக்கும் நன்மை இல்லை, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் பலன் இல்லை. இயற்கையோடு இயைந்த தமிழர்களின் பாரம்பரிய உணவு முறையில் சிறுதானியங்கள் பெரும் பங்கு வகித்திருக்கின்றன. அவற்றின் வரலாறு, நற்குணங்கள் மற்றும் மருத்துவப் பலன்களை அறிந்துகொள்வதன் மூலம் நன்மை அடைவதுடன் சிறு தானியங்களின் உன்னதத்தை உலகிற்கு உணர்த்த முடியும். சிறு தானியங்களாகத் தினை, சாமை,கம்பு, கேழ்வரகு (அல்லது) ராகி, குதிரை வாலி, காடைக்கண்ணி (பனிவரகு), வரகு,சோளம் ஆகியவற்றைப் பட்டியலிடலாம். இந்த அதிர்ஷ்டவசமான தானியங்கள் நமக்காகவே மேலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன என்று சிறு தானியங்களின் சிறப்பைச் சீன நாடோடிப் பாடல் ஒன்று

சித்திரிக்கிறது.

இந்தச் சிறு தானியங்கள் தமிழர் உணவு முறையிலிருந்து சிறிது சிறிதாக விட்டு விலகிக் காணாமல் போய்விட்டன. சிறு தானியங்கள் என்றொரு தானிய வகை இருப்பதையே இன்றைய தலைமுறையினர் அறியாமல் உள்ளனர்.

சிறு தானியங்களின் மகத்துவத்தை மக்கள் அறியாமல் இருப்பது காலத்தின் கோலமே. சுற்றுச் சூழல் மற்றும் பருவநிலை மாற்றங்களால் மழை பெய்வதிலும் முறை மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் தாக்கம் மழையை நம்பி விளையும் மானாவாரிப் பயிர்களையும் பாதித்துள்ளது. மானாவாரிப் பயிர்களான சிறு தானியப் பயிர்களை விளைவிக்கும் விவசாயிகளும் மிகமிகக் குறைவே. பசுமைப் புரட்சியால் மானாவாரிப் பயிர்கள் புறம் தள்ளப்பட்டன என்று பன்னாட்டு உணவுப் பயிர்கள் ஆய்வு நிறுவனத்தின் தலைமை இயக்குநர் வில்லியம்தார் கூறியிருப்பது இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது. நஞ்சை நிலப் பயிர்களுக்கு உள்ள விலைப் பாதுகாப்பு புஞ்சை நில மானாவாரிப் பயிர்களுக்கு இல்லை என்பதால் அவற்றின் உற்பத்தியும், அவற்றைச் சாகுபடி செய்யும் நிலப்பரப்பும் ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்துவிட்டது என்று குற்றம் சாட்டுகிறார் இயற்கை வேளாண் விஞ்ஞானி ஆர்.எஸ். நாராயணன்.

விளைவு? கேள்விப்படாததும் விநோதமுமான நோய்கள் மக்களைத் தாக்குகின்றன. நமது பாரம்பரிய சிறு தானியங்களைக் கைவிட்டு நவீன உணவு முறைக்கு மாறியதால் ஏற்பட்டதன் பலன் இது.

நம் உடல்நலத்திற்கு அதிகம் கேடு விளைவிப்பது துரித உணவுகளே (Fast Food) ஆகும். குழந்தைகள், பதின் பருவத்தினரின் அதீத உடற் பருமனுக்குத் துரித உணவுகளை உட்கொள்வதே காரணம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிறு தானியங்களை ஏழைகளின் உணவு என்று சொல்வார்கள். இன்று அவை வசதியானவர்களின் உணவாக, நோயாளிகளுக்கான உணவாக மாறியுள்ளது. இந்திய மக்களின் உணவு கலாசாரத்தைச் சற்று ஆழ்ந்து நோக்கினால் அதில் சிறு தானியங்களின் முக்கியப் பங்கை நம்மால் புரிந்துகொள்ள முடியும். தமிழர்களின் உணவுமுறையில் சிறு தானியங்களின் மறுபிரவேசம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று

கூறலாம். சிறு தானியங்களின் மருத்துவக் குணங்களையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொண்ட நகர வாசிகள் அவற்றைத் தேடி அலையும் சூழல் ஏற்பட்டுள்ளது. மக்கள் பெருமளவில் காதி, சர்வோதயா மற்றும் ஆர்கானிக் கடைகளை நோக்கிப் படையெடுத்து வருகின்றனர். சிறு தானியங்களை விளைவிக்க விவசாயிகளும் இப்போது முன்வந்துள்ளனர். மத்திய-மாநில அரசுகளும் மானாவாரியில் விளையும் சிறு தானிய உணவுப் பயிர்களை ஊக்குவிக்கத் தொடங்கியுள்ளன.

பழந்தமிழ் இலக்கியங்களில் சிறுதானியங்கள் கூலம் என வழங்கப்படுகின்றன. சிறு தானியங்கள் குறிஞ்சி, முல்லை என்ற இரு நிலங்களிலும் பயிரிடப்பட்டன. சிறு தானியங்களை மழையை நம்பி விளையும் மானாவாரிப் பயிர்கள் அல்லது புஞ்சைநிலப் (புன்செய்) பயிர்கள் என்றும் கூறுவர். சிறுதானியங்கள் தமிழர்களின் பாரம்பரிய உணவுப் பண்பாட்டில் பெரும் பங்கு வகித்திருக்கின்றன. இறை வழிபாட்டிலும் சிறு தானியங்களின் பங்கு இருந்திருக்கிறது. முருகக் கடவுளுக்குத் தினை மாவும், திருமாலுக்குத் தினைப் பாயசமும் படைக்கப்பட்டன.

பூப்பெய்தும் பெண்களுக்குத் தினை மாவிடித்து அதில் நல்லெண்ணெய் ஊற்றி உண்ணக் கொடுப்பது தமிழக நாட்டுப்புற மக்களிடம் இன்றும் வழக்கில் உள்ளது. சிறு தானியங்களைப் பயிரிடும் வேளாண் முறைகளைத் தமிழகப் பழங்குடி மக்கள் தெரிந்து வைத்திருப்பதுடன் இன்றும் பயன்படுத்தி வருகின்றனர். நமது உடலுக்கு நன்மை அளித்து விவசாயத்துக்கும் அனுகூலமாக இருந்ததாலேயே சிறு தானியங்களுக்கு பழந்தமிழகத்தில் அவ்வளவு முக்கியத்துவம் இருந்திருக்கிறது. சிறு தானியங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான வரலாறும் சிறப்பு மருத்துவக் குணங்களும் உண்டு. தினை (Foxtail Millet): இந்தத் தானியம் உலக அளவில் பயிரிடப்படுகிறது. தினை உற்பத்தியில் இந்தியா முதன்மை வகிக்கிறது. தினையில் செய்யப்படும் உணவுகள் நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. குழந்தை பெற்ற தாய்மார்களுக்குத் தினையைக் கூழாக்கித் தருவது தமிழர் மரபாக உள்ளது. இது புரதச் சத்து, நார்ச் சத்து, கொழுப்புச் சத்து, கனிமச் சத்து, இரும்புச் சத்து மற்றும்

பீட்டா கரோட்டின் (beta-Carotene) நிறைந்தது. குதிரைவாலி (Barnyard Millet): மானாவாரி நிலங்களில் விளையக்கூடிய இத் தானியம் குறைந்த நாள்களில் நிறைந்த விளைச்சல் தரக்கூடியது. இப்பயிரின் கதிர், குதிரையின் வால் போல் காணப்படுவதால் குதிரைவாலி என அழைக்கப்படுகிறது. குதிரைவாலி தானியத்தில் சமைக்கப்படும் உணவு உடல் உறுப்புகளைத் தூய்மைப்படுத்தும் நற்குணம் கொண்டது. சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் தன்மை இதற்கு உண்டு.

சாமை (Little Millet): சாமை எல்லா வயதினருக்கும் ஏற்ற உணவு. வயிற்றுப் புண்ணை ஆற்றும் சக்தி, மலச்சிக்கல் வராமல் தடுக்கும் தன்மை முதலான ஏராளமான மருத்துவக் குணங்கள் சாமை உணவுக்கு உண்டு.

கேழ்வரகு (Finger Millet): நகர்ப்புறங்களில் ராகி என்றும் நாட்டுப் புறங்களில் கேப்பை என்று வழங்கப்படுகிறது. இதை ஏழைகளின் உணவு என்று கூறுவார்கள். கேழ்வரகு உடலுக்கு நல்ல உறுதியைக் கொடுப்பதுடன் உடல் எடையைக் குறைக்கும் குணமும் கொண்டது. நீரிழிவு நோயாளிகளுக்கு மிகமிக நல்லது. கம்பு (Pearl Millet): ஆப்பிரிக்கக் காடுகளில் விளைந்து கிடந்த இந்தத் தானியத்தை அங்கு வசித்த பழங்குடிகளே உலகுக்கு அறிமுகம் செய்தார்கள். அமெரிக்கா இந்தத் தானியத்திலிருந்து எரிபொருள் எடுக்கத் தொடங்கியுள்ளது. தமிழகத்தில்தான் கம்பு அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இதனைத் தென் தமிழகக் கிராமப் பகுதிகளில் கம்மம்புல் என்று அழைக்கின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் உணவில் கம்பு இரண்டறக் கலந்திருக்கிறது. தமிழகத்தின் கரிசல் பகுதிகளில் கம்மஞ் சோறு உருண்டை மிகவும் பிரபலம். கம்பு கால்சியம், இரும்பு, புரதம், மாவுச் சத்து நிறைந்தது. வயிற்றுப் புண் மற்றும் குடல் புண்ணை ஆற்றும் குணம் கொண்டது. குழந்தைகள், கர்ப்பிணிகள் கம்பு உணவைத் தங்கள் உணவில் கட்டாயம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என மருத்துவர்களும், உணவியல் நிபுணர்களும் அறிவுறுத்துகின்றனர். மன அழுத்தத்தைப் போக்கிப் புத்துணர்வு ஏற்படுத்தும் சக்தி கம்புக்கு இருப்பதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கண்பார்வை மற்றும் பாலியல் குறைபாடுகளுக்கும் இதில் மருந்து பொதிந்திருப்பதாகக்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிறு தானியங்களிலே அதிக புரதச் சத்து நிறைந்தது கம்பு. சோளம் (White Millet): ஐரோப்பியர்கள் வழி இந்தியாவுக்கு வந்த சோளம் தமிழகத்தில் அதிகம் பயிரிடப்படுகிறது. இதில் நாட்டுச் சோளம் (வெள்ளைச் சோளம்), கருஞ்சோளம், செஞ்சோளம், நாத்துச் சோளம், மக்காச் சோளம், இரும்புச் சோளம் எனப் பல வகைகள் உண்டு. நாட்டுச் சோளம் சுவையும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்த தானியம். தமிழர்களின் உணவில் சோளம் இரண்டறக் கலந்துள்ளது. பொங்கல் திருநாளில் சோளம் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. தென் மாவட்டக் கிராமங்களில் சோளத் தோசையின் மணமும் ருசியும் அலாதியானது. சோளத்தில் செய்த உணவுகள் நீரிழிவு நோய்க்கு மிகவும் நல்லது. வரகு (Kodo Millet): வறண்ட பகுதிகளில்கூட விளையக்கூடிய தன்மை வரகிற்கு உண்டு. வரகு தானியத்தின் மேல் பகுதி ஏழு அடுக்குகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதன் விதைகள் ஆயிரம் வருடங்கள் விதைப்புத்திறன் கொண்டவை என வேளாண் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். வரகில் செய்த உணவுகள் உடல் பருமனைக் குறைத்துக் கண்களுக்கு ஒளி தரக் கூடியவை. பெண்களின் மாதவிடாய் பிரச்னைகளைச் சீர் செய்யும் தன்மை கொண்டது. மொத்தத்தில் சிறு தானிய உணவுகள் சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவிக்காதவை. சிறு தானியங்கள் குறைந்த நீரில் விளையும் தன்மை கொண்டவை. குறுகிய காலப் பயிர்கள் வரிசையில் சிறு தானியங்கள் முதலிடம் பெறுகின்றன. குறைந்த எரிபொருளில் சிறு தானிய உணவைச் சமைக்க முடியும். சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள், நோயாளிகள் என அனைத்து தரப்பினர்க்கும் உகந்த நுண்ணூட்டச்சத்து கொண்டதாகச் சிறு தானியங்கள் விளங்குகின்றன.

மனித உணவுத் தேவையை கலோரி சக்தியை வைத்துக் கணக்கிடாமல், புரதம், நல்ல கொழுப்பு, தாதுப்பு, வைட்டமின் சத்துக்களை வழங்கும் மானாவாரியில் விளையக்கூடிய சாமை, தினை, குதிரைவாலி, காடைக்கண்ணி, வரகு முதலான சிறு தானியங்களை வைத்துக் கணக்கிட வேண்டும் என்று வேளாண் விஞ்ஞானிகள் வற்புறுத்துகின்றனர்.

பாரம்பரியச் சிறு தானிய உணவுகள் குறித்து மக்கள் மத்தியில்

விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நம் வலிமையான, ஆரோக்கியமான உடலுக்குப் பாரம்பரிய சிறு தானிய உணவுகளைப் பயன்படுத்த மக்கள் முன்வர வேண்டும். சிறு தானிய விளைச்சலில் தன்னிறைவு அடைய மத்திய-மாநில அரசுகள் ஊக்குவிக்க வேண்டும். சிறு தானிய உற்பத்தி மற்றும் உணவுகளால் எதிர்கால இந்தியப் பொருளாதாரமும், சந்ததியினரும் பெரும் பலன் அடைவது திண்ணம்.

கட்டுரையாளர்:

பேராசிரியர்.

உடல்நலத்திற்கு அதிகம் கேடு விளைவிப்பது துரித உணவுகளே (Fast Food). குழந்தைகள், பதின் பருவத்தினரின் அதீத உடற் பருமனுக்குத் துரித உணவுகளை உட்கொள்வதே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**ரூ.1.5 லட்சத்துக்கு தேங்காய் ஏலம்**

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏலம் மூலமாக ரூ. 1 லட்சத்து 55 ஆயிரத்துக்கு தேங்காய் விற்பனை திங்கள்கிழமை நடைபெற்றது.

அவல்பூந்துறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் 10 டன் எடையுள்ள 27 ஆயிரத்து 341 தேங்காய்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், அதிகபட்சமாக டன் ரூ. 17 ஆயிரத்து 100-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 13 ஆயிரத்து 89-க்கும் ஏலம் மூலமாக விற்பனையானது. மொத்தம் ரூ. 1 லட்சத்து 55 ஆயிரத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

**மரவள்ளிக் கிழங்கு விலை டன் ரூ.6 ஆயிரம்: விவசாயிகள் மகிழ்ச்சி**

கடம்பூர் மலைப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு டன் ரூ. 6 ஆயிரமாக உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள கடம்பூர், இருட்டிபாளையம், கல்கடம்பூர், பசுவனாபுரம், திங்களூர், சின்னசாலட்டி, வைத்தியநாதபுரம், கேர்மாளம் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களில் மரவள்ளிகிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

தற்போது, மரவள்ளிக் கிழங்கு அறுவடை நடைபெற்று வருகிறது. இங்கு ரோஸ் ரக மரவள்ளிக் கிழங்கு அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளதால் ஏக்கர் ஒன்றுக்கு 11 டன் மகசூல் கிடைத்துள்ளது.

கிழங்கில் உள்ள மாவுசத்து அளவை அடிபடையாகக் கொண்டு விலை நிர்ணயிக்கப்படுகிறது. ரோஸ் ரக கிழங்கில் மாவுச் சத்து 22 புள்ளிகள் கிடைப்பதால் அதன் விலை புள்ளிக்கு ரூ. 220-ஆக உயர்ந்துள்ளது.

கடந்த மாதம் டன் ரூ. 3 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட ரோஸ் ரகக் கிழங்கு தற்போது ரூ. 6 ஆயிரத்துக்கு விற்பனையாகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஜவ்வரிசி ஆலைகளுக்கு கடம்பூர் மலைப் பகுதியில் இருந்தே கிழங்குகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. ஆலை நிர்வாகிகள் கடம்பூரில் முகாமிட்டு, அறுவடையான கிழங்குகளை தரம் பிரித்து அனுப்புகின்றனர்.

இதுகுறித்து, தமிழ்நாடு பழங்குடியின மக்கள் சங்கத் தலைவர் கடம்பூர் கே.ராமசாமி கூறியது:

சத்தியமங்கலம் பகுதியில் சாகுபடி செய்யப்படும் முள்ளவாடி ரகத்தை விட மலைப் பகுதியில் விளையும் ரோஸ் ரகத்துக்கு விலை அதிகம். கடந்த மாதம் பெய்த மழையால் பெரும்பாலான இடங்களில் மரவள்ளிக் கிழங்கு மகசூல் பாதிக்கப்பட்டது.

இதனால் கிழங்கு விலை 2 மடங்காக உயர்ந்துள்ளது. அதன்படி, முள்வாடி ரகக் கிழங்கு டன் ரூ. 5 ஆயிரத்துக்கும், ரோஸ் ரகம்

ரூ. 6 ஆயிரத்துக்கும் விற்கப்படுகிறது. தற்போது அறுவடை துவங்கியுள்ளதால் அதன் விலை மேலும் உயரும் என்றார்.

**விவசாயிகளுக்கு விதை கிராமப் பயிற்சி**

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை, விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான விவசாயிகள் விதை கிராமப் பயிற்சி திங்கள்கிழமை கே.நடுஅள்ளி கிராமத்தில் நடைபெற்றது. விதைச் சான்றளிப்புத் துறை வேளாண்மை அலுவலர் சசிகுமார் தலைமை வகித்துப் பேசினார். பயிற்சியில், விதைப் பண்ணை பதிவு செய்தல், விதைப்பண்ணை பராமரிப்பு, விதைப் பண்ணையில் கலவன்கள் இன்றி பராமரித்தல், பயிர் விலகல், வயல் ஆய்வு செய்தல், விதைகளை உலரவைத்தல், விதைகளில் இருக்க வேண்டிய ஈரப்பதம் முறைகள், தரமான விதைகளை பிரித்தெடுத்தல், பூச்சிநோய் தாக்காத அதிக மகசூல் தரக்கூடிய விதைகளை தேர்வு செய்து விதைத்தல், விதை நேர்த்தி செய்வதின் முக்கியத்துவம், அறுவடை செய்த விதைகளை தரமான முறையில் உலர வைத்து சேமித்து வைத்தல் பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மகேஸ்வரி, உதவித் தொழில்நுட்ப மேலாளர் பரமசிவம், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மீன்வள ஆராய்ச்சிக்கு கூடுதல் நேரங்களை ஒதுக்க வேண்டும்: துணைவேந்தர்**

மீன்வள ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சிக்கும், தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கும் அதிக நேரங்களை ஒதுக்க வேண்டும் என்றார் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன்.

தூத்துக்குடியில் திங்கள்கிழமை நடைபெற்ற மீன்வளப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது ஆராய்ச்சிக் குழு மற்றும் மீன்வள ஆராய்ச்சியாளர்கள் கூட்டத்தில் பல்கலைக்கழக தொழில்நுட்பங்கள் அடங்கிய கையேட்டை வெளியிட்டு அவர் மேலும் பேசியது:

மீன் வளர்ப்போருக்கும் மீன்வள பயன்பாட்டாளர்களுக்கும் பயன்படும் வகையில் மீன்வள ஆராய்ச்சியாளர்கள் பணிபுரிய வேண்டியது அவசியம். மீன்வளத்தில் உள்ள இடர்பாடுகளை நிவர்த்தி செய்யும் விதமாக மீன்வள ஆராய்ச்சியாளர்கள் தங்களுடைய பணிநேரத்தில் 40 சதவீதத்தை ஆராய்ச்சிக்கும், தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கும் ஒதுக்கவேண்டும்.

மேலும், குறுகிய காலகட்டத்தில் மீன்வளப் பல்கலைக்கழகம் நாட்டின் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் வலிமையுள்ள ஒரு நிறுவனமாக உருவெடுக்க வேண்டும்.

இதற்கு அனைத்து ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் (பொறுப்பு) கா. காரல்மார்க்ஸ் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை தாக்கல் செய்தார்.

2012ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட 34 வகையான தொழில்நுட்பங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய கையேட்டை துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் வெளியிட்டார். தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் கோ. சுகுமார் மற்றும் பேராசிரியர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**அறிவியல் நுட்பங்களைப் பின்பற்றுங்கள்: விவசாயிகளுக்கு சித்தராமையா வேண்டுகோள்**

வேளாண் வளர்ச்சிக்கு அறிவியல், தகவல் தொழில்நுட்பங்களை விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்று, கர்நாடக முதல்வர் சித்தராமையா கேட்டுக் கொண்டுள்ளார்.

பெங்களூரு வேளாண் பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேளாண் வளர்ச்சி குறித்த சர்வதேச மாநாட்டைத் தொடக்கிவைத்து அவர் பேசியது:

வேளாண் வளர்ச்சிக்கு அறிவியல், தகவல் தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் சந்தை நிலவரம், வானிலையை அறிந்து கொள்வதோடு, மற்ற விவசாயிகளுடன் தொடர்பு கொள்ளவும் உதவியாக இருக்கும்.

தேசிய அளவில் விவசாயிகள் பல்வேறு பிரச்னைகளைத் தொடர்ந்து சந்தித்து வருகின்றனர். அவர்களுக்கு அறிவியல், தகவல் தொழில்நுட்பங்கள் பேருதவியாக இருக்கும். மேலும், விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், அதற்குரிய லாபம் கிடைக்கவும் வழி செய்ய வேண்டும்.

விவசாய உற்பத்திக்கு அறிவியல் ரீதியான விலை கிடைக்க வேண்டும். இதற்குத் தேவையான வழிமுறைகளை மாநாட்டில் விவாதிக்க வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தின் பயன் மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க வேண்டும் என்றார்.

கர்நாடக வேளாண் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகௌடா பேசியது:
விவசாயிகளுக்கு உதவும் வகையில் பல்வேறு திட்டங்களில் திருத்தம் செய்து அமல்படுத்தப்பட்டுள்ளது. கர்நாடகத்தின் திட்டங்களை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு

தேசிய அளவில் அமல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது மாநில அரசின் சாதனையாகும் என்றார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் பி.டி.பரமேஸ்வர் நாயக், விவசாயப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் சிவண்ணா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சாதிக்கும் இளமை:இயற்கை வேளாண்மையே இலக்கு**

இந்திய பாரம்பரிய வேளாண் நுட்பங்களை, உலகம், கடைபிடிக்கும் இந்த நேரத்தில், காய்கறிகளில் பூச்சி மருந்து, பழங்களில் கார்பைடு என, நம் ஊர் விளைபொருட்கள் பற்றிய செய்திகளை படித்து, பசிக்காத வரம் கேட்கவே நினைக்கிறோம். வேட்டையாடப்படுவதால், முயல் அழிவதுமில்லை; சிங்கம் பெருகுவதுமில்லை எனும் இயற்கை சமநிலையின் அடிப்படையில், இயற்கை விவசாயம் இன்று, மீட்டெடுக்கப்படுவது, ஆறுதலான மாறுதல். ஒரு ஏக்கர் நிலம், இஞ்ஜினியரிங் பயிலும் மாணவர்களால் உழுது, உரம் போடப்பட்டு, விதைக்காக வீரியமுடன் காத்திருக்கிறது; சென்னை, கிண்டி, அண்ணா பல்கலையில்.

உருவாக்கும் முயற்சி:அதுகுறித்து, அண்ணா பல்கலை தொழில் முனைவோர் அமைப்பின் இயக்குனர், ஜி.ரவிக்குமார் கூறியதாவது: நம் இளைஞர்களை வேலை தேடுவோராக அல்லாமல், கொடுப்பவர்களாக தயாரித்திருக்கிறோம். அதற்கு, நானே சிறந்த உதாரணம்.

தொழில் முனைவோர் அமைப்புக்கு இயக்குனராக பொறுப்பேற்ற பின், பல்வேறு தொழில் முனைவோரை சந்தித்தேன். அவர்களை, பல்கலைக்ககழகத்திற்கு அழைத்து, அனுபவங்களை பகிர்ந்து கொள்ள

செய்தேன். அவ்வாறு தான், விவசாயத்திலும் நிகழ்ந்து, தற்போது, மாணவர்களிடம் வரவேற்பு பெற்றுள்ளது.

அண்ணா பல்கலையில், நீர் மேலாண்மை துறைக்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தை, இயற்கை வழி வேளாண்மைக்காக பெற்று, மாணவர்களை ஊக்கப்படுத்தினோம். சட்டையில்லா சாமிநாதன் உள்ளிட்ட பல்வேறு அனுபவ விவசாயிகளின் ஆலோசனைகளை, நேரடியாக வழங்க செய்தோம்.

பின், நிலத்தை சிறுசிறு பகுதிகளாக பிரித்து, பாத்திகளாகவும், வரப்புகளாகவும் செப்பனிட்டு, உரமிட்டோம். ஆர்வத்துடன், மாணவர்கள், பல்வேறு பகுதிகளுக்கு சென்று, நிதி உதவிகளை பெற்று வந்துள்ளனர்.அதேபோல், மாணவர்களை கொண்டு, கழிவுநீர் மேலாண்மை, திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் சேகரிப்பு அமைப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்களை துவங்கவும், அவற்றை சந்தைப் படுத்தவும் திட்டமிட்டு உள்ளோம். அண்ணா பல்கலைக்குட்பட்ட, ஐநூறுக்கும் அதிகமான பொறியியல் கல்லூரிகளில், தொழில் முனையும் மையங்களை உருவாக்கும் முயற்சியில் உள்ளோம். இவ்வாறு, அவர், தெரிவித்தார்.

33 சென்ட்:தொழில் முனைவோர் அமைப்பின், மாணவர் தலைவரும், உற்பத்தி பொறியியல் துறையில், இறுதியாண்டு பயிலும் மாணவருமான, கே.மூர்த்தி கூறியதாவது:

இன்றைக்கு, உலகத்திற்கே சோறு போடும் விவசாயிகள், பட்டினியால் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.பல்வேறு தொழில்களை துவங்குவதற்கு பதில், விவசாயத்தை லாபகரமானதாக மாற்ற முனைவதே, தொழில் முனைவோருக்கான முதல் தகுதியாகவும்,

அனுபவமாகவும் இருக்கும். காரணம், விவசாயத்தின் பின்னணியில், பல்வேறு தொழில்கள் நடக்கின்றன.

நான், தமிழகம் முழுதும் உள்ள பல்வேறு விவசாயிகளை சந்தித்து, அவர்களின் அனுபவங்களை கேட்டேன். எங்கள், மாணவ நண்பர்களுடன், அருகில் உள்ள வயல்வெளிக்கு சென்றோம்.

எங்கள் பல்கலையில், புதர் மண்டிக்கிடந்த, ஒரு ஏக்கர் நிலத்தை, நாங்களே செப்பனிட்டோம். எங்களின் முயற்சிக்கு, இயற்கை ஆர்வலர்கள் பலர், நிதி, சூரியஒளி தகடு உள்ளிட்ட, பல்வேறு உதவிகளை செய்ய முன்வந்துள்ளனர்.

நாங்கள், எங்கள் நிலத்தை, 33 சென்ட் அளவில், பல்வேறு கூறுகளாக பிரித்து, பல்வேறு பயிர்களை பயிரிட திட்டமிட்டுள்ளோம். அதற்கு, பாரதியாரின் காணி நிலம் பாடல் தான் உந்துதல்.

விற்பனைக்கு வரும்திருவொற்றியூர் பகுதியில் இருந்து கொண்டு வந்த, மாட்டு சாணம், பல்கலை வளாகத்தில் சேகரிக்கப்பட்ட தழை உரம் உள்ளிட்டவற்றை அடியுரமாக போட்டுள்ளோம்.

நெல், கீரை, காய்கறிகள், மூலிகைகள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், பழ மரங்கள், உள்ளிட்டவற்றை, முதல் மாற்று, ஊடு பயிர்களாக பயிரிட திட்டமிட்டுள்ளோம்.

காஞ்சிதை, நண்டாஞ்சு, மஞ்சக்கடம்பு, மணிபுங்கம், நிரிவேங்கை, சிவப்பு, ஆச்சா உள்ளிட்ட, நுாறு வகையான அரிய நட்சத்திர மரங்களை, தோட்டக்கலை துறையிடம் பெற்று, நடவும் திட்டமிட்டுள்ளோம்.உப தொழில்களாக, பண்ணை குட்டைகள் மூலம், மீன் வளர்ப்பு, தொழுவத்தில், கால்நடை வளர்ப்பு, மூலிகை தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்களிலும் ஈடுபட உள்ளோம்.

விரைவில், எங்களின் இயற்கை விளைபொருட்கள், எங்கள் வளாகத்தில் விற்பனைக்கு வரும். மேலும், இயற்கை பொருட்கள், எப்போதும் கிடைக்கும் வகையில், வெளியில் இருந்தும் வாங்கி, விற்பனை செய்ய உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். தொடர்புக்கு:ஜி.ரவிக்குமார்98402 57426 - நமது நிருபர்

**இரண்டாம் போக சாகுபடிக்கு புதிய நெல் ரகம் அறிமுகம்**

டி.என்.பாளையம்: கோவை வேளாண் ஆராய்ச்சி பல்கலைக்கழக ஆராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட சன்ன ரகம் கோ-51 நெல் சாகுபடி காலம், 110 நாட்களாகும். திருவாரூர் மாவட்டத்தில் இந்த ரகம் முதலில் அறிமுகமானது. அங்கு முதல்போக நடவு செய்து உரிய காலத்தில் அறுவடை செய்ததில் நல்ல மகசூல் கிடைத்தது. இதையடுத்து, தமிழகத்தில் இரண்டாவதாக ஈரோடு மாவட்டத்தில், தடப்பள்ளி அரக்கன்கோட்டையில் இரண்டாம்போக பாசனத்துக்கு இந்த நெல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நோய் தாக்கம் குறைவாக இருக்கும். ஏக்கருக்கு, இரண்டு டன் வரை மகசூல் கிடைக்கும் என்பதால், விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

**பழ மரங்களை பாதுகாக்க சுண்ணாம்பு கலவை தெளிப்பு**

குன்னுார்: குன்னுார் பழப்பண்ணையில், பழ மரங்களை பாதுகாக்க, சுண்ணாம்பு கலவையை தெளிக்கும் பணி நடந்து வருகிறது.

குன்னுார் பழப்பண்ணையில், ஆரஞ்ச், ஊட்டி ஆப்பிள், சீத்தா, கொய்யா, பீச், பேரி, பிளம்ஸ் உள்ளிட்ட பல்வேறு பழங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் பிளம்ஸ், சீத்தா, உள்ளிட்ட பழங்கள் அதிகளவில் விளைகின்றன.

இந்நிலையில், கடந்த மாதம் பெய்த கன மழையால், பழ மரங் கள், செடிகள் பாதிக்கப்பட்டு, பாசி பிடித்துள்ளது. மேலும், இலைகள்

உதிர்ந்தன. இவற்றை பாதுகாக்கவும், பாசியின் பாதிப்பில் இருந்து, மரங்களை மீட்கவும் சுண்ணாம்பு கலவை தெளிக்கப்பட்டுள்ளது.

பழப்பண்ணை அதிகாரிகள் கூறுகையில்,' பாசி படர்ந்த மரங்கள், செடிகளை கவனிக்காமல் விட்டுவிட்டால், அவை பாதிப்புக்குள்ளாகும். இதனால், பழங்களின் வரத்தும் குறையும். எனவே, இதனை பாதுகாக்க சுண்ணாம்பு கலவை தெளிக்கப்படுகிறது' என்றனர்.

**தானிய சேமிப்பு கிடங்கு திறப்பு**

தியாகதுருகம்: முடியனூர் கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில், தானிய சேமிப்பு கிடங்கை முதல்வர் ஜெ., திறந்து வைத்தார்.

தியாகதுருகம் ஒன்றியம், முடியனூர் கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் 12.50 லட்சம் ரூபாய் மதிப்பில் தானிய சேமிப்பு கிடங்கு கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு ஜூலை 28ம் தேதி நடந்த பூமி பூஜையில் அமைச்சர் மோகன் அடிக்கல் நாட்டினார். பணிகள் முடிந்த நிலையில் நேற்று பகல்12 மணிக்கு காணொளி காட்சி மூலம் முதல்வர் ஜெ., தானிய சேமிப்பு கிடங்கு கட்டடத்தை திறந்து வைத்தார்.

அதை தொடர்ந்து எம்.எல்.ஏ., அழகுவேலுபாபு, முன்னாள் எம்.எல்.ஏ., கோமுகிமணியன், ஒன்றிய சேர்மன் பச்சையம்மாள் வைத்திலிங்கம், திட்டக்குழு உறுப்பினர் அய்யப்பா ஆகியோர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். செயலாளர் ராஜமாணிக்கம், ஊராட்சி தலைவர் சுசீலா உத்திராபதி, கொங்கராயபாளையம் கூட்டுறவு சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி, சங்க துணைத் தலைவர் வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர் விருத்தாம்பாள் செல்வராஜ், இயக்குனர்கள் ஜான்பாஷா, ராயர், குமாரசாமி, கேசவலு, பன்னீர்செல்வம், பூங்கொடி, மகாலட்சுமி, பூமதி, கண்ணன், கிளை செயலாளர் சாமிதுரை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**உளுந்தூர்பேட்டை கமிட்டியில் மஞ்சள், பருத்தி கொள்முதல்**

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டியில் மஞ்சள், பருத்தி மற்றும் தேங்காய் பருப்பு கொள்முதல் செய்யப்படுகிறது.

உளுந்தூர்பேட்டை, திருநாவலூர் ஒன்றியங்களை சேர்ந்த 176 கிராமங்களை எல்லைகளாக நிர்ணயிக்கப்பட்டு இந்த மார்க்கெட் கமிட்டி இயங்கி வருகிறது. இந்த கமிட்டியில் நெல், உளுந்து, மணிலா, எள், பச்ச பயிறு, தட்ட பயிறு, ராகி, மக்காச்சோளம், திணை, மஞ்சள், பருத்தி, தேங்காய் பருப்பி உள்ளிட்ட 18 வகையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது.

இந்நிலையில் வியாபாரிகள், விவசாய நிலத்திற்கே சென்று குறைந்த விலைக்கு மஞ்சள், பருத்தி உள்ளிட்டவற்றை வாங்கிச் சென்றனர். பல விவசாயிகள் சேலம், நாமக்கல் மற்றும் விழுப்புரம் உள்ளிட்ட மார்க்கெட் கமிட்டிக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். இதனால் மஞ்சள், பருத்தி, தேங்காய் பருத்தி ஆகியவை வரத்து முற்றிலும் நின்று போனது.

வெளி மாவட்டங்களுக்கு விவசாய பொருட்கள் எடுத்து செல்வதால், வீண் செலவினம், நேரம் வீணாகி வருவதை தடுக்கவும், உள்ளூரிலேயே கூடுதல் விலை கிடைக்க செய்வதற்காக உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டியிலேயே மீண்டும் மஞ்சள், பருத்தி, தேங்காய் பருப்பு கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக வெளி மாவட்டங்களில் இருந்து வியாபாரிகளும் வரவழக்கப்பட்டுள்ளனர்.

எனவே விவசாயிகள் மஞ்சள், பருத்தி, தேங்காய் பருப்பு போன்றவற்றையும் விற்பனை கொண்டு வரலாம் என உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெய் வாழைத்தாரில் செவ்வாழை பழம்**

கரூர்: கரூர் மார்கெட்டுக்கு வந்த, நெய் வாழைத்தாரில் செவ்வாய் பழம் இருந்ததை, பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்து சென்றனர்.
கரூர் ரயில்வே ஸ்டேஷன் அருகே வாழைத்தார் மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இதில் உள்ள வி.வி., மண்டிக்கு, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் இருந்து, வாழைத்தார் லோடு நேற்று முன்தினம் இரவு வந்தது. அதில், ஒரு நெய் வாழைத்தாரில் மூன்று செவ்வாழை பழம் இருந்தது கண்டுப்பிடிக்கப்பட்டது.

இதுகுறித்து வாழைத்தார் வியாபாரி முருகையன் கூறியதாவது: செவ்வாழை காயாக இருக்கும் போதே சிவப்பு நிறத்தில்தான் இருக்கும். ஆனால், நெய் வாழை காயாக இருக்கும் போது, பச்சை நிறத்திலும் பழுத்த நிலையில் மஞ்சள் நிறத்திலும் இருக்கும். ஆனால், சத்தியமங்கலத்தில் இருந்து நெய் வாழைத்தாரில் மூன்று பழங்கள் மட்டும் செவ்வாழையாக இருந்தது. தாரில் உள்ள மற்ற பழங்கள் மஞ்சள் நிறத்தில் உள்ளது. ஒட்டுண்ணி செய்யப்பட்டால் மட்டும் இது போன்று சாத்தியம். ஆனால், எதுவும் செய்யப்படாத நிலையில், நெய் வாழைத்தாரில் மூன்று பழங்கள் மட்டும் செவ்வாழை பழமாக வந்துள்ளது ஆச்சரியமாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினர்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையம்:சாயல்குடி விவசாயிகள் எதிர்பார்ப்பு**

சாயல்குடி: சாயல்குடி சுற்றுவட்டார பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்து அரசு நிர்ணயிக்கும் விலையில் நெல் கொள்முதல் செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்வேண்டும் என, விவசாயிகள் எதிர்பாக்கின்றனர். சாயல்குடி, கடலாடி, கமுதி பகுதிகளில் கிட்டதட்ட 20 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. இவை இன்னும் 15 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். விவசாயத்துக்காக வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதற்காக விவசாயிகள் அறுவடை செய்த உடன் அடிமாட்டு விலைக்கு நெல்லை விற்பனை செய்து விடுவர். இதை தடுக்கும் விதமாக நேரடி நெல்

கொள்முதல் நிலையங்களை திறந்து அரசு நிர்ணயித்துள்ள விலையில் விவசாயிகளிம் நெல் கொள்முதல் செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.புதுக்குடியிருப்பு விவசாயி ராதாகிருஷ்ணன் கூறியதாவது: நெல் விதைத்தது முதல் அறுவடை செய்து வீட்டிற்கு நெல் வரும்வரை அதிகப்படியான செலவுகளை விவசாயிகள் சந்தித்து வருகின்றனர். சிலர் நெல் வியாபாரிகளிடம் கடன் பெற்று விவசாயம் செய்துள்ளனர். இதனால் அறுவடையானதும் காத்திருக்காமல் நெல்லை குறைந்த விலைக்கு விற்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்தால் கட்டுப்படியான விலை கிடைக்கும், என்றார். கடலாடி எடை அலுவலர் சுப்பையா கூறுகையில்,"" விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்வதற்காக குடோன் களை சுத்தபடுத்தி தயாராக வைத் துள்ளோம். கலெக்டர் உத்தரவிட்டதும் நெல் கொள்முதல் செய்வதை துவக்கிவடுவோம். அரசு நிர்ணயிக்கும் விலை கிடைக்கும்," என்றார்.

**வாழை மரத்தின் இடையில் குலை**

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் அருகே வாழை மரத்தின் இடையில் குலை தள்ளியுள்ளதை அப்பகுதியினர் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.

மேலச்செங்குடியைச் சேர்ந்தவர் விவசாயி காத்தவராயன். இவர் வீட்டு தோட்டத்தில் வாழை மரங்கள் நட்டுள்ளார். இதில் ஒரு வாழை மரத்தின் இடையில் இருந்து குலை தள்ளியுள்ளது. பொதுவாக மரத்தின் நுனிப்பகுதியில் இருந்து குலைதள்ளுவது வழக்கம். இடையில் இருந்து வாழை குலை தள்ளியுள்ளதை அப்பகுதியினர் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.

தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" மண் வளம், இயற்கை உரம், தண்ணீர் போன்ற காரணங்களால் வாழை மரத்தின் இடையில் குலைதள்ள வாய்ப்புகள் உள்ளது," என்றார்.

**வெள்ளை சோளம் மகசூல் அதிகரிப்பு:கமுதி விவசாயிகள் மகிழ்ச்சி**

கமுதி:கமுதியில் வெள்ளை சோளம் மகசூல் அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கமுதி சுற்றுவட்டாரப் பகுதிகளில் கிட்டதட்ட 2 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் வெள்ளை சோளம் சாகுபடி செய்துள்ளனர். இதன்மூலம் பிஸ்கட், ஓட்ஸ், சப்பாத்தி மாவு, ரொட்டி மாவு உள்ளிட்ட உணவு வகைகள் தயாரிக்கப்படுகிறது. இவைதவிர கால்நடை தீவனத்திற்கும் பயன்படுத்தபடுகிறது. இதனால் வெள்Øளே சோளத்துக்கு மவுசு அதிகரித்துவருகிறது. வறட்சியை தாங்கி வளரும், உற்பத்தி செலவு குறைவு, நோய் மற்றும் பூச்சி தாக்குதல் இருக்காது என்பதால் அப்பகுதி விவசாயிகள் வெள்ளை சோளம் சாகுபடி செய்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

கமுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வெள்ளை சோளம் தற்போது அறுவடை தருவாயை எட்டியுள்ளது. செலவுபோக ஏக்கருக்கு குறைந்தபட்சம் ரூ.10 ஆயிரம் முதல் அதிகபட்சம் ரூ.20 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கமுதி விவசாயி ராமன் கூறுகையில், ""சோள பயிர்களுக்கு மழையை எதிர்பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. சீசனில் லேசான மழை பெய்தால் கூட நிலத்தை உழவு செய்து சோளத்தை விதைத்து விடலாம் களை எடுப்பு, உரமிடுதல், மருந்து தெளித்தல் ஆகியவற்றுக்கான செலவு குறைவு. அதிக மகசூல் கிடைக்கும் என்பதால் தொடர்ந்து வெள்ளை சோளம் சாகுபடி செய்துவருகிறேன்,'' என்றார்.

**பெரிய கண்மாயை நிரப்பிய வைகை நீர்:10 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் தப்பியது**

ஆர்.எஸ்.மங்கலம்:வைகை ஆற்றில் இரண்டாவது முறையாக திறந்துவிடபட்டுள்ள தண்ணீர் ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாயை நிரப்பி வருகிறது. கருகும் தருவாயில் உள்ள 10 ஆயிரம் ஏக்கர்

நெற்பயிர்கள் தப்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர். தமிழகத்தின் இரண்டாவது கண்மாயாக திகழும் ஆர்.எஸ். மங்கலம் பெரிய கண்மாயில் ஆயிரத்து 205 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்க முடியும். இதன் மூலம் திருவாடானை தாலூவில் 12 ஆயிரத்து 142 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இந்த கண்மாய்க்கு, நீர் ஆதாரப் பகுதி களில் கனமழை பெய்தும் வரத்து கால்வாய்கள் மாயமானதால் தண்ணீர் வரத்து முற்றிலுமாக தடை பட்டது. இதனால் ஒரு அடி தண்ணீர் கூட தேங்காமல் கண்மாய் வறண்டது.

இதற்கிடையே ராமநாதபுரம் மாவட்ட பாசனத்திற்காக வைகையில் திறந்துவிடபட்ட தண்ணீரும் பெரிய கண்மாய்க்கு தலைகாட்டவில்லை. இதனால் கண்மாய் தண்ணீரை நம்பி நெல் சாகுபடி செய்த விவசாயிகள் நிலை குலைந்தனர். வெயிலின் தாக்கத் தால் வாடி வதங்கிய பயிர்களை காப்பாற்ற சிறிய விவசாயிகள் ஊரணிகளில் தேங்கிய மழைநீரை ஏற்றம் மூலம் இறைத்துவந்தனர்.

கருகும் தருவாயில் உள்ள பயிர்களை காப்பாற்ற வைகையில் மீண்டும் தண்ணீர் திறந்துவிட்டு பெரிய கண்மாயை நிரப்ப மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலி யுறுத்திவந்தனர். நடவடிக்கை எடுப்பதாக விவசாயிகளிடம் கலெக்டர் நந்தகுமார் உறுதியளித்தார். இதனடிப்படையில் வைகையில் இரண்டாவது முறையாக திறந்து விடபட்டுள்ள தண்ணீர் ஆர்.எஸ். மங்கலம் பெரிய கண்மாயை நிரப்பி வருகிறது. இதன்மூலம் திருவா டானை தாலுகா பகுதிகளில் கிட்ட தட்ட 10 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களை காப்பாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால் விவ சாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கலெக்டருக்கு விவசாயிகள் பாராட்டு: 72 கண்மாய் பாசன நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் சோழந்தூர் பால கிருஷ்ணன்

கூறுகையில், "தமிழகத்தில் வீராணம் ஏரிக்கு அடுத்த இடத்தில் ஆர்.எஸ். மங்கலம் பெரிய கண்மாய் திகழ்கிறது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த கண்மாய்கு ஆண்டிற்கு ஒரு முறை வைகை தண்ணீர் வருவதே கேள்விக்குறியாக இருந்த நிலையில், கடந்த 30ஆண்டு கால வரலாற்றில் தற்போதைய கலெக்டர் தீவிர முயற்சியால் ஒரே ஆண்டில் இருமுறை தண்ணீர் கொண்டுவந்து சாதனை புரிந்துள்ளார். கலெக்டர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அனைவருக்கும் பெரிய கண்மாய் மற்றும் 72 சிறிய கண்மாய் பாசன விசாயிகள் சார்பில் நன்றி யினை தெரிவித்து கொள்கிறோம்," என்றார்.

**புன்செய் நிலத்தில் உளுந்து**

காரைக்குடி:நெல் விதைக்காத நிலத்தில், உளுந்து பயிர் செய்வதில் விவசாயிகள் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.மானாவாரி விவசாயத்தை அடிப்படையாக கொண்ட சாக்கோட்டை ஒன்றியத்தில் நன்செய் நிலத்தை காட்டிலும் புன்செய் அதிகம். ஆண்டுக்கு ஒரு முறை பருவம் தவறாமல் விவசாயம் செய்து வந்த விவசாயிகள், பருவநிலை மாறியதால், வெளிநாடுகளுக்கு பறந்தனர். விளைந்த பூமி வெட்டவெளியானது. காணுமிடமெல்லாம் கருவேல மரங்கள் நிறைந்தது. தற்போது மீண்டும் விவசாயத்தில் ஆர்வம் காட்ட தொடங்கியுள்ளனர். பள்ளத்தூரில் பல ஆண்டுகளாக தரிசாக கிடந்த 200 ஏக்கருக்கும் அதிகமான நிலம், பண்படுத்தப்பட்டு உளுந்து மற்றும் நெல் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதே போல் சாக்கோட்டை ஒன்றியத்தில் தரிசாக கிடந்த புன்செய் நிலத்தில் உளுந்து விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கருநாவல்குடி விவசாயி ஐங்கரன் கூறும்போது: தண்ணீர் முறையாக இருந்தால் மட்டுமே நெல் விவசாயம் மேற்கொள்ள முடியும். அதிலும் எல்லா ரகத்திலும் வெற்றி காண முடிவதில்லை. டீலக்ஸ் விளைவித்தால் மட்டுமே லாபத்தை பார்க்க முடிகிறது. அந்த ரகத்தில் நோய் தாக்குதல்

அதிகரித்து வருவதால் தற்போது அதுவும் இழப்பாகவே உள்ளது. இதனால், விவசாயத்தை பல ஆண்டுகளாக கைவிட்டிருந்தோம்.

"தினமலர் நாளிதழில்' கடந்த வாரம் தரிசாக கிடக்கும் நிலத்தில் உளுந்து பயிரிட்டால் என்ன நன்மை, தண்ணீர் இல்லாமல் எவ்வாறு விவசாயம் மேற்கொள்வது என்பது குறித்த தகவலை அறிந்து, அதன் அடிப்படையில் 3 ஏக்கரில் உளுந்து பயிரிட்டுள்ளேன். மானாவாரி ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் ஒத்துழைப்பு தந்தனர், என்றார்.

**"சீர்கொடுக்க' கரும்பை தேடும் மக்கள்**

சிங்கம்புணரி; சிங்கம்புணரியில் கடைவீதிக்கு விற்பனைக்கு கரும்பு வரத்தில்லாததால் பொங்கல் சீர்வரிசை கொடுப்பவர்கள் கரும்பை தேடி அலைகின்றனர்.

இப்பகுதியில் திருமணம் முடிந்தவர்களுக்கு தலைப் பொங்கலுக்கு பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டிற்கு பொங்கல் சீர் வழங்கும் வழக்கம் உண்டு.சில குடும்பங்களில் பெண்ணிற்கு ஆயுள் முழுதும் கூட பொங்கல் சீர் கொடுப்பது வழக்கமாக உள்ளது.

பொங்கலுக்கு தேவையான பொங்கல் பானை,பச்சரிசி வெல்லம், பாசிப்பருப்பு<,ஏலம்,சுக்கு,நெய்,மஞ்சள் கொத்து,பனங்கிழங்கு,பரங்கிக்காய் இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக 10 கரும்பு கொண்ட கரும்புகட்டும் சீர் கொடுக்கப்படும். தைப்பொங்கலுக்கு தனியார்,சிறு தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நிறுவனம் சார்பில் கரும்பு கட்டு பொங்கலுக்கு வழங்கப்படும். வழக்கமாக ,மேலூர், பிரான்மலைப்பகுதியில் விளையும் கரும்பு பொங்கலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பே, சிங்கம்புணரி கடை வீதிகளில் விற்பனைக்கு வந்துவிடும்.

அரசு,பொங்கல் பரிசாக கரும்பு கொடுப்பதற்கு விவசாயிகளிடம் மொத்தமாக கொள்முதல் செய்வதால் இந்தாண்டு நேற்று வரை சிங்கம்புணரி கடைவீதியில் விற்பனைக்கு கரும்பு வரத்து இல்லை.பொங்கல் சீர் கொடுப்பவர்கள் வெளியூர்களுக்கு சென்று வாங்கி வருகின்றனர்.தரமான கரும்பு ஒன்றின் விலை ரூ.50 கொடுத்து வாங்கியதாக தெரிவிக்கின்றனர்.

**இரவில் பனிப்பொழிவு,பகலில் காற்றுநெல்லிக்காய் விளைச்சல் பாதிப்பு**

மானாமதுரை:மானாமதுரையில் கடந்த இரு மாதங்களாக பனி பொழிவு,காற்றால் நெல்லிக்காய் விளைச்சல் பாதித்துள்ளது.தமிழகத்தில் பெருநெல்லி,சிறு நெல்லி என இரண்டு ரகங்கள் அதிகமாக விளைகிறது.பெருநெல்லி ஊறுகாய்,சித்த மருத்துவத்திற்கு அதிகளவு பயன்படுகிறது. மானாமதுரை பகுதியில் மேலப்பிடாவூர், செய்களத்தூர், சிப்காட், கொன்னக்குளம், கொத்தங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் நெல்லிக்காய் தோப்புகள் உள்ளன. பெருநெல்லி இங்கு அதிகம் விளைவிக்கப்படுகிறது.

நடவு செய்த ஆறு மாதத்தில் நெல்லிக்காய் விளைச்சல் ஆரம்பித்து விடும்.ஒரு நாள் விட்டு ஒரு நாள் அறுவடை நடைபெறுகிறது. ஏக்கருக்கு நன்கு விளைந்த நெல்லிக்காய் 300 கிலோ வரை கிடைக்கும். வருடத்திற்கு ஒருமுறை கிளைகளை வெட்டி சுத்தப்படுத்த வேண்டும்.

இதற்கு களை எடுத்தல் என பெயர்.வருடம் முழுவதும் விளைச்சல் இருந்தாலும் டிசம்பர்,ஜனவரியில் சற்று கூடுதலாக விளைச்சல் இருக்கும். ஏக்கருக்கு 200 மரங்கள் வரை நடவு செய்யலாம்.

இந்தாண்டு வடகிழக்கு பருவ மழை மற்ற பகுதிகளில் நன்கு பெய்தாலும் சிவகங்கை,ராமநாதபுர மாவட்ட விவசாயிகளை ஏமாற்றி விட்டது. ஆனாலும் சொட்டு நீர் பாசனத்தில் நெல்லி மரங்களை விவசாயிகள் வளர்த்தனர்.டிசம்பரில் இருந்தே இரவில் பனியும்,பகலில் காற்றும்

வீசுவதால் நெல்லிக்காய் உதிர்ந்து விவசாயிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த சீசனில் நெல்லி அறுவடை என்பது வாரம் ஒரு முறை நடக்கும். ஜனவரி பிறந்து 10 நாட்கள் ஆகியும் இன்னமும் அறுவடை தொடங்கவில்லை.விவசாயி கச்சேந்தி கூறுகையில்: பனி பொழிவு காரணமாக காய்கள் பெருக்கவில்லை.பகலில் காய்கள் உதிர்ந்து வருகின்றன. இன்னும் ஒரு சில நாட்களில் மருந்து தெளித்தால் ஓரளவிற்கு விளைச்சல் இருக்கும், என்றார்.

ஏக்கருக்கு 200 முதல் 300 கிலோ வரை நெல்லிக்காய் கிடைத்த இடத்தில் தற்போது வெறும் 5 கிலோ தான் கிடைத்து வருகிறது.எனவே விவசாயிகள் நெல்லிகாய்களை பறிக்காமல் உள்ளனர்.

**தொப்பையாறு அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**

தர்மபுரி: தொப்பையாறு அணையில் இருந்து, பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இடது புற கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்பால், ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை உள்ளதால், ஆக்கிரமிப்புக்களை அகற்ற, விவசாயிகள் கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.

தர்மபுரி அடுத்த, தொப்பையாறு அணையில் இருந்து பாசனத்திற்காக நேற்று காலை, 10 மணிக்கு, கலெக்டர் விவேகானந்தன், தண்ணீர் திறந்து வைத்தார். வரும், 55 நாட்களுக்கு, வினாடிக்கு, 70 கனஅடி தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம், தர்மபுரி மாவட்ட ஆயக்கட்டு பகுதியைச் சேர்ந்த, 2,050 ஏக்கரும், சேலம் ஆயக்கட்டு பகுதியைச் சேர்ந்த, 3,280 ஏக்கர் நிலம் பாசனம் பெரும் என, கலெக்டர் விவேகானந்தன் கூறினார். நிகழ்ச்சியின் போது, இடதுபுற கால்வாய் பாசன பகுதியைச் சேர்ந்த கம்மம்பட்டி மற்றும் அதன் அருகே

உள்ள பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், கலெக்டர் விவேகானந்தனிடம் மனு கொடுத்தனர்.

அதில் தெரிவித்துள்ளதாவது: கம்மம்பட்டிக்கு அருகில் இருந்து, இடது புற கால்வாயில் அதிகளவில் ஆக்கிரமிப்புக்கள் உள்ளதால், தற்போது அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட்ட போதிலும், 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு தண்ணீர் செல்ல முடியாத நிலை உள்ளது. இதனால், 1,350 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறமுடியாத நிலை உள்ளது. எனவே, இடது புற கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளனர். இதையடுத்து, இடது புற கால்வாயில் ஆக்கிரமிப்பு இருந்தால், அதை உடனடியாக அகற்ற, அணை செயற்பொறியாளர் செல்வத்துக்கு கலெக்டர் உத்தரவிட்டார். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினகரன்

இன்றையவேளாண்செய்திகள்

**ஏற்றுமதி தேயிலை வர்த்தகம் 100 சதவீதத்தை எட்டியது**



கோவை: கோவையில் முதன்முறையாக ஏற்றுமதி தேயிலை வர்த்தகம் இந்த வாரம் நடந்த ஏலத்தில் 100 சதவீதம் விற்பனையாகியுள்ளது. மொத்தம் 1.59 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. அவை அனைத்தும் விற்பனையாகியது. இதன் மதிப்பு ரூ.1.40 கோடி. கடந்த 4 மாதமாக

ஏற்றுமதி தேயிலைத்தூள் வர்த்தகம் உயர்ந்து வந்தது. ஆனால், இந்த மாதம் நடந்த முதல் ஏலத்தில் ரூ.1.40 கோடிக்கு உச்சத்தை தொட்டுள்ளது. ஏற்றுமதி வர்த்தகம் உயர்ந்தது குறித்து கோவை தேயிலை வர்த்தக மைய செயலாளர் • குமார் கூறுகையில், ''ஆர்தோடக்ஸ் உயர்ரக தேயிலை ஈராக், ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. சிடிசி தேயிலை எகிப்து, பாகிஸ்தான், இங்கிலாந்து நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாட்டில் நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான முதல் 7 மாதங்களில் பாகிஸ்தானுக்கு ரூ.93 கோடி மதிப்புள்ள தேயிலை ஏற்றுமதியாகியுள்ளது. சென்ற நிதியாண்டில் இதே காலத்தில் இது ரூ.69 கோடியாக இருந்தது. இதே காலத்தில் பல்வேறு நாடுகளுக்கு ஒட்டுமொத்த தேயிலை ஏற்றுமதி 7% உயர்ந்து சுமார் 12 கோடி கிலோவாக உள்ளது. இதன் மதிப்பு ரூ.2,318 கோடி. நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி வளர்ச்சி 7% உயர்ந்ததால் கோவையில் ஏற்றுமதி வர்த்தகம் அதிகரித்துள்ளது'' என்றார்.

**நாட்டுக்கோழி வளர்ப்பு முகாம்**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் உழவர் பயிற்சி மைய தலைவர் வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கை:ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையம் சார்பில் நாட்டுக்கோழி வளர்ப்பு முகாம் நாளை காலை 10 மணிக்கு பயிற்சி மையத்தில் நடக்கிறது. நாட்டுக்கோழி இறைச்சியில் புரோட்டின் சத்து அதிகளவு உள்ளது. நாட்டுக்கோழி வளர்ப்பு தொழில் மூலம் பெருமளவு லாபம் ஈட்டலாம். நாட்டுக்கோழி வளர்ப்பு சுய வேலை வாய்ப்பை பூர்த்தி செய்யும் தொழில் உள்ளது. மேலும் அறிவியல் முறையில் உயர் வீரிய ரக கோழி குஞ்சுகள் பராமரிப்பு, சரிவிகித உணவு, ஆரோக்கியம் மற்றும் முதலீடு பற்றியும் ஒரு நாள் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு தலைவர், உழவர் பயிற்சி மையம், ஏனாத்தூர், காஞ்சிபுரம் மற்றும் 044 2764019 என்ற தொலைபேசியில் தொடர்பு

கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட்டுக்கு வாழை இலை வரத்து அதிகரிப்பு ஒரு கட்டு ரூ.500ஆக குறைந்தது**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டுக்கு நேற்று வாழை இலை வரத்து வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. இதனால் ஒருக்கட்டு ரூ.500ஆக குறைந்த விலைக்கு ஏலம்போனது என வியாபாரிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு கொண்டுவரப்படும் காய்கறிகளை உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். இதில் வாரத்தில் வியாழன் மற்றும் ஞயிற்றுக்கிழமைகளில் வாழை இலை ஏலம் நடைபெறுகிறது. சுற்றுவட்டார கிராமங்கள் மட்டுமின்றி பழனி, ஒட்டன்சத்திரம், தென்காசி, தூத்துக்குடி பகுதிகளில் இருந்து விவசாயிகள் இலைக்கட்டுளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இதில் ஒவ்வொரு வாரமும் வாழை இலை வரத்தை பொறுத்து ஏலத்தில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழைக்கு பிறகு பல கிராமங்களில் வாழை புதிதாக நடவு செய்யப்பட்டன. மேலும், கடந்த மாதத்தில் பொழிந்த பனிப்பொழிவால் சில வாரங்களாக மார்க்கெட்டுக்கு வாழை இலை வரத்து குறைவாக இருந்தது. இதனால் 100 எண்ணம் கொண்ட ஒருக்கட்டு வாழை இலை ரூ.700 முதல் ரூ.850வரை ஏலம்போனது.இந்நிலையில் கடந்த சில நாட்களாக சுற்றுவட்டார கிராமங்களில், வாழை இலை அறுவடை தீவிரமாக நடைபெற்றது. மேலும், உடுமலை, ஒட்டன்சத்திரம், தென்காசி உள்ளிட்ட பகுதிகளிலும் வாழை அறுவடை பணி தொடர்ந்து நடக்கிறது. இதையடுத்து நேற்று பொள்ளாச்சி சந்தையில் நடந்த ஏலத்தின் போது வழக்கத்தைவிட அதிகளவில் வாழை இலை வரப்பெற்றது.

ஆனால் முகூர்த்தநாட்கள் இல்லாமல் உள்ளதால், அவை குறைவான விலைக்கு ஏலம்போனது. இதில் ஒருகட்டு வாழை இலை ரூ200 முதல் அதிகபட்சமாக ரூ.500 வரை என குறைந்த விலைக்கு ஏலம் விடப்பட்டு விற்பனையானது. இருப்பினும் பொங்கல் பண்டிகை நெருங்கும்போது, வரும் ஏலநாளில் வாழை இலை விலை உயர வாய்ப்புள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**அமராவதி ஆற்றில் தண்ணீர் திறப்பு நீட்டிப்பு நெல் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்**

உடுமலை,: அமராவதி அணை நிரம்பி உள்ளதால் பாசன காலம் முடிந்தும் ஆறு மற்றும் பிரதான கால்வாயில் தண்ணீர் திறப்பு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால் 2ம் போக நெல் சாகுபடியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.உடுமலை அருகே உள்ள அமராவதி அணையில் இருந்து திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கருக்கு மேலான நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டுதோறும் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஜூன் முதல் மார்ச் மாதம் வரை ஆற்றிலும், புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு செப்டம்பர் முதல் ஜனவரி வரை பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்படும். அணையில் போதுமான தண்ணீர் இல்லாததால் பழைய ஆயக்கட்டில்கடந்த ஆண்டு ஜூன் மாதம் துவங்க வேண்டிய பாசனம் ஒரு மாதம் கழித்துதான் துவங்கியது. ஜூலை 19ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது.

கடந்த அக்டோபர் மாதம் 30ம் தேதி வரை தண்ணீர் நிறுத்தப்பட்டது. பிறகு ஒரு மாதம் கழித்து நவம்பர் 30ம் தேதி மீண்டும் ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது.புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு செப்டம்பர் மாதத்திற்கு பதில் அக்டோபர் மாதம் பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. 7 நாள் திறப்பு, 5நாள் அடைப்பு என்ற விகிதத்தில் தண்ணீர் வினியோகிக்கப்பட்டு வருகிறது. பழைய ஆயக்கட்டுக்கு மார்ச் மாதம்

வரையும், புதிய ஆயக்கட்டுக்கு ஜனவரி மாதம் வரையுமே பாசன காலம். ஆனால் இரண்டு பாசனத்துக்கும் ஜனவரி 8ம் தேதி வரைதான் தண்ணீர் வழங்க முடியும் என ஏற்கனவே பொதுப்பணித்துறை அதிகாரிகள் அறிவித்திருந்தனர். நீர் இருப்பை பொறுத்து பாசன காலத்தை நீட்டித்துக் கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் வடகிழக்கு பருவமழையால் அமராவதி அணை நிரம்பியது. அணையில் 85 அடிக்கு தண்ணீர் இருப்பு உள்ளதால் பாசன காலத்தை நீட்டிக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் முடிவு செய்தனர். அதிகாரிகளின் பரிந்துரையை ஏற்று அமராவதி ஆற்றிலும்,பிரதான கால்வாயிலும் தொடர்ந்து தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து பாசனம் நிறுத்தப்படாமல் ஆற்றிலும், பிரதான கால்வாயிலும் தண்ணீர் தொடர்ந்து திறக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் தண்ணீர் திறப்பால் பழைய ஆயக்கட்டு பாசனத்தில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்தனர். முதல்போக விளைச்சலை வெற்றிகரமாக அறுவடை செய்தனர். அணை நிரம்பி இருப்பதாலும், தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாலும் நீண்ட காலத்துக்குப்பிறகு 2ம் போக நெல் சாகுபடியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**அலங்கார மீன் வளர்ப்பு இலவச பயிற்சி முகாம்**

திருப்பூர், : திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி விலங்கியல் முதுநிலை ஆராய்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் ஆகியவை இணைந்து கிராமப்புற பகுதி மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு பயிற்சிகளை இலவசமாக அளித்து வருகிறது. அந்த வகையில் அலங்கார வண்ண மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் கல்லூரியில் நேற்று நடந்தது. சிக்கண்ணா கல்லூரி விலங்கியல் பேராசிரியரும், இம்முகாமின் ஒருங்கிணைப்பாளருமான மோகன்குமார்

வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு அலங்கார மீன் வளர்ப்பு குறித்து மதுரை வாடிப்பட்டி அன்னை அலங்கார மீன் வளர்ப்பு மையத்தின் விஜயகுமார் பேசியதாவது: வண்ண மீன்கள் வளர்ப்பு, வளர்ந்து வரும் ஒரு நல்ல தொழில். ஆர்வம் உள்ள அனைவரும் இந்த தொழிலில் இறங்கலாம். பள்ளி, கல்லூரி மாணவர்கள், சுய உதவிக் குழுக்கள் என பல்வேறு தரப்பினரும் இத்தொழிலை செய்யலாம். வண்ண மீன்களில் கோல்டு பிஸ் எனப்படும் மீன்களுக்கு அதிக அளவில் கிராக்கி உள்ளது. இது செடிகளில் முட்டையிட்டு குஞ்சி பொறிக்கும். பைட்டர் என்ற வண்ணமீன் உலக அளவில் பிரசித்தி பெற்ற மீன். இதேபோல் அரவணா எனப்படும் வாஸ்து மீனிற்கு அதிக கிராக்கி உள்ளது. மதுரையில் ஏராளமானோர் வண்ண மீன் வளர்ப்பை குடிசைத் தொழிலாகவே செய்து வருகின்றனர். இத்தொழிலை ஊக்கும் விதமாக மத்திய, மாநில அரசுகள் சார்பில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். இந்த முகாமில், சிக்கண்ணா கல்லூரி மாணவ, மாணவியர், மகளிர் சுய உதவிக்குழுவினர் என 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். இவர்கள் அனைவருக்கும் பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும் என முகாமின் ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் தெரிவித்தார்.

**பட்டுக்கூடு உற்பத்தியில் நவீன தொழில்நுட்பம் கோவையில் நாளை கருத்தரங்கம், கண்காட்சி**

கோவை, : மத்திய அரசின் பட்டு ஆராய்ச்சி நிலையம் மற்றும் மாநில பட்டு வளர்ச்சித்துறை சார்பில் கோவை, திருப்பூர் மாவட்ட பட்டுப்புழு விவசாயிகளுக்காக, வெண்பட்டுக்கூடு உற்பத்தியில் நவீன தொழில் நுட்பம் குறித்த ஒரு நாள் கருத்தரங்கம், கண்காட்சி மற்றும் கலந்துரையாடல் நாளை (12ம் தேதி) கோவை பாலசுந்தரம் ரோட்டிலுள்ள பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடக்கிறது. இதில், பட்டுப்புழு வளர்ப்பு கிராம

இணைப்பு திட்டத்தில் உள்ள தொண்டாமுத்தூர் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் அன்னூர், பெரியநாயக்கன்பாளையம், கிணத்துக்கடவு, திருப்பூர் மாவட்ட பகுதிகளை சேர்ந்த பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கருத்தரங்கில், கேரளா மாநில பட்டு வளர்ச்சி விஞ்ஞானி சரளா, சேலத்திலுள்ள தமிழக பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் சாந்தா, சேலத்திலுள்ள மத்திய பட்டு வளர்ச்சி நிலையம் விஞ்ஞானி சிக்கண்ணா, மாநில பட்டு வளர்ச்சித்துறையின் மண்டல இணை இயக்குநர் ஜெயராஜ், கோவை பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் பழனிதுரை, மற்றும் பட்டு வளர்ச்சி விஞ்ஞானிகள் ராஜ்குமார், சிவக்குமார், கோவை சில்க் மார்க் உதவி இயக்குநர் சுப்புராஜ், கோவை மத்திய பட்டு நூல் ஆராய்ச்சி நிலையம் உதவி இயக்குநர் கோவிந்தராஜன், உடுமலை பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குநர் நாகராஜன், கோவை பட்டு வளர்ச்சித்துறை உதவி ஆணையர் கனகரத்தினம் ஆகியோர் பேசுகின்றனர். விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்கின்றனர். கண்காட்சியில் பட்டுப்புழு, பட்டுக்கூடு உற்பத்திக்கு தேவையான உபகரணங்கள் இடம்பெறுகிறது. விவசாயிகள் பங்கேற்று பயன்பெற வேண்டும் என்று கோவை மாவட்ட பட்டு வளர்ச்சித்துறை ஆய்வாளர் நாகராஜ் தெரிவித்தார்.

**பொங்கல் பண்டிகை கோபியில் வாழைத்தார் விலை உயர்வு**

கோபி, : கோபியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வாழைத்தார் விலை உயர்ந்து காணப்பட்டது. கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் இருமுறை வாழைத்தார் ஏலம் நடைபெறுவது வழக்கம். இந்த ஏலத்தில் கோபி, பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம், அத்தாணி, டி.என்.பாளையம், ஆயிபாளையம், கரட்டுப்பாளையம், குருமந்தூர், காராப்பாடி உள்ளிட்ட பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்து கொள்வது

வழக்கம். இந்த வாரம் நடை பெற்ற ஏலத்தில் மொத்தம் 8 ஆயிரத்து 500 வாழைத்தார் வரத்து இருந்த நிலையில் நேந்திரன் கிலோ ஒன்றுக்கு ரூ.17 முதல் ரூ.23 வரையிலும், கதளி கிலோ ஒன்றுக்கு ரூ.18 முதல் ரூ.23 வரையிலும் விலை போனது. அதே போன்று செவ்வாழை தார் ஒன்றுக்கு ரூ.380 முதல் ரூ.480 வரையிலும், பூவன் ரூ.-350 முதல் ரூ.400 வரையிலும், தேன் வாழை ரூ-.300 முதல் ரூ.400 வரையிலும், ரஸ்தாளி ரூ.280 முதல் ரூ-.330 வரையிலும், மொந்தன் ரூ.200 முதல் ரூ.280 வரையிலும், ரொபஸ்டோ ரூ-.150 முதல் ரூ-.210 வரையிலும், பச்சை நாடன் ரூ. 150 முதல் ரூ.180 வரையிலும் விற்பனையானது. 8 ஆயிரத்து 500 வாழைத்தார்களும் ரூ.8 லட்சத்திற்கு விலை போனது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த வாரத்தை விட இந்த வாரம் தார் ஒன்றுக்கு ரூ.50 முதல் 100 வரை விலை அதிகரித்துள்ளது. அதே போன்று இங்கு நடைபெற்ற தேங்காய் ஏல விற்பனைக்கு மொத்தம் 12 ஆயிரம் தேங்காய்கள் வரத்து இருந்தது. தேங்காய் ஒன்று ரூ.4 முதல் ரூ.8 வரை விலை போனது. மொத்தம் 90 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆனது.

**குண்டடம் சந்தையில் வளர்ப்பு ஆடுகள் விலை உயர்வு**

தாராபுரம் : திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சுற்றுவட்டாரபகுதி விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பையும் முக்கிய தொழிலாக கொண்ட பகுதியாகும். இதனால் கிராமப்பகுதிகளில் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை பாரம்பரிய நடைமுறைகளுடன் உற்சாகமாக கொண்டாடப்படுவது வழக்கம். தற்போது பெய்த மழை காரணமாக மேய்ச்சல் நிலங்கள் செழிப்புடன் இருப்பதால் ஆடு வளப்புக்கு இணக்கமான சூழல் நிலவுகிறது.இதனால் ஆடுகளை வளர்ப்புக்காகவும்,இறைச்சிக்காகவும் விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இதனைதொடர்ந்து சனிக்கிழமை

குண்டடத்தில் நடைபெற்ற ஆட்டுச்சந்தைக்கு வழக்கத்தை விட கூடுதலாக 3500 ஆடு விற்பனைக்கு வந்தன. கடந்த வாரசந்தையில் 8முதல் 10கிலோ எடைகொண்ட வெள்ளாடுகள் ரூ.2500க்கு விற்பனையான நிலையில் பொங்கல் பண்டிகை நெருங்கியதால் இந்தவார சந்தையில் ரூ.3ஆயிரம் முதல் ரூ.3,200வரை விற்பனையானது. இதனால் விவசாயிகளிடமிருந்து ஆடுகளை வாங்கி வளர்க்கும் ஆசையில் வந்த சக விவசாயிகள் விலை உயர்வு காரணமாக தயக்கமடைந்தனர்.இதேபோல் இறைச்சிக்கான செம்மறி ஆடுகளின் விலையும் ரூ.3ஆயிரம் வரை விலை போனது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆடுகளின் விலை கணிசமாக உயர்ந்தது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. இதுகுறித்து தாராபுரம் வியாபாரி அனிபா கூறியதாவது: மார்கழி மாதம் பொதுவாக இறைச்சி விற்பனை மிககுறைவாக இருக்கும்.ஆனாலும் பொங்கல் பண்டிகை நெருங்குவதால் வியாபாரிகளை விட விவசாயிகளே வளர்ப்புக்காக ஆடுகளை வாங்கி செல்கிறார்கள் இருந்தாலும் இறைச்சி நுகர்வோர்களுக்காக நாங்கள் ஆடுகளை வாங்கி செல்லவேண்டியுள்ளது.ஆனால் ரூ. இரண்டாயிரம் விலைபோன ஆடுகள் ரூ.2,500 முதல் மூன்றாயிரம் என விலை கூறப்படுகிறது ஆட்டு இறைச்சி கிலோ ரூ.400 முதல் 420 வரைதான் விற்பனை செய்யமுடிகிறது. இந்த விலை உயர்வை காரணம்காட்டி இறைச்சி விலையைகூட்ட முடியாது. அதனால் இந்த விலை கொடுத்துஆடுகளை வாங்குவது கட்டுபடியாகாது. மேலும் ஆட்டின் தோல் ரூ.250 முதல் 300வரை விற்பனையான நிலை மலை ஏறிவிட்டது மதுரை,கோவை,திருச்சி பகுதி தோல் வியாபாரிகள் கொள்முதலுக்கே வருவதில்லை. இதனால் ஒருஆட்டின் தோலை ரூ.50 கொடுத்து வாங்ககூட ஆளில்லை. இறைச்சி கடை ஒன்றுக்கு 200 தோலுக்கு மேல் விற்பனையாகாமல் தேங்கி கிடக்கிறது இது இன்னும் 7 நாட்களுக்கு பிறகு அழுகிப்போய் விடும். விற்பனை செய்யமுடியாது.வியாபாரிகளிடம் காரணம் கேட்டால் தோல் சுத்திகரிப்பு செய்வதில் மத்தியஅரசு பல

கட்டுப்பாடுகளை விதித்துள்ளது அதனால் கொள்முதல் விறுவிறுப்பு இல்லை என்கின்றனர். ஆடுகளை வாங்கி வளர்ப்பதற்கு மட்டுமே தற்போது சூழ்நிலை சாதகமாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**ரசாயன உரம் இல்லாத பயிர் பாதுகாப்பு பயிற்சி**

பாபநாசம், : பாபநாசம் அருகே மெலட்டூர் அடுத்த அன்னப்பன்பேட்டையில் திருச்சி மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம் மற்றும் தமிழக வேளாண்மைத் துறை இணைந்து நடத்திய ரசாயனம் இல்லாத பயிர் பாதுகாப்பு குறித்து பயிற்சி முகாம் நடைபெற்றது. மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் திருச்சி மண்டல அலுவலர் உமா மகேஸ்வரி, துணை அலுவலர் கோகுல்ராம் கலந்து கொண்டு பூச்சி தாக்குதல், நீர் நிர்வாகம், உர நிர்வாகம் மற்றும் நெல் சாகுபடியில் உள்ள தொழிற் நுட்பங்கள் குறித்தும், ரசாயன உரங்கள், பூச்சி கொல்லிகள், களைக் கொல்லிகள் தவிர்த்து இயற்கையான முறையில் சூற்றுச் சூழலை பாதிக்காத வகையில் நெல் சாகுபடி செய்வது குறித்து விளக்கி கூறினார். வேளாண்மை துணை இயக்குநர் முரளி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி அவசியம் வேளாண்துறை ஆலோசனை**

பழநி, : பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி செய்வதன் அவசியம் குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பயிர்களில் விதை மூலம் பரவக்கூடிய பூஞ்சான் நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு விதையுடன் பூஞ்சான மருந்து கலந்து விதை நேர்த்தி செய்திட வேண்டும். விதை மூலம் பரவும் இலைப்புள்ளி, இலைக்கருகல், இலை உறை அழுகல் மற்றும் குலை நோய் போன்ற பூஞ்சான நோய்களை தடுக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் - ”கார்பன்டைசிம்” கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும். இல்லா விட்டால் 1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம்

“டிரைக்கோ டெர்மாவிருடி” அல்லது 1 கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் “சூடோமோனாஸ் ப்ளாரசன்ஸ்” என்ற உயிரியல் பூஞ்சான மருந்தை விதைப்பதற்கு முன் கலந்து விதைக்க வேண்டும். 1 ஏக்கர் விதைக்க தேவையான விதைக்கு விதை நேர்த்தி செய்ய 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை செலவாகும். ஆனால், விதை நேர்த்தி செய்வதால், பயிர் வளர்ச்சி காலத்தில் நோய்கள் தாக்கி, அவற்றை கட்டுப்படுத்த மருந்திற்கு செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. நெல், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு விதைநேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு அசோஸ் பைரில்லம் 1 பாக்கெட் ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும். நிலக்கடலை மற்றும் பயிறு வகைகளுக்கு விதை நேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு “ரைசோபியம்கல்ச்சர்” 1 பாக்கெட்டை ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையைக் கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின் விதைக்க வேண்டும். உயிர் உர விதை நேர்த்தி செய்வதால், உயிர் உரங்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கொடுக்கும். அதனால் இளம் பயிரின் இலைகள் கரும்பச்சை நிறத்துடன் செழிப்பாக வளரும்.

பயிர்கள் வறட்சியை தாங்கி வளர்ந்து, கூடுதல் மகசூல் கொடுக்கும். இதனால் கால் பங்கு தழைச்சத்து இடுவதை குறைக்கலாம். அதன் மூலம் உரச் செலவை குறைக்கலாம். எனவே. விவசாயிகள் பூசணக் கொல்லி விதை நேர்த்தி செய்து பயிர்களை நோய்களிலிருந்து வருமுன் காக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுகு பழநி வேளாண்மை அலுவலகத்தை விவசாயிகள் அணுகலாமென பழநி வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**பொங்கலை அதிகம் கொடுத்தால் காளைகளை அமிலநோய் பாதிக்கும் அபாயம் கால்நடை பராமரிப்பு துறை அறிவுரை**

திண்டுக்கல், : உற்சாக மிகுதியில் காளைகளுக்கு பொங்கலை அதிகம் உண்ண கொடுக்க கூடாது. இதனால் அமில நோய் ஏற்பட வாய்ப்புள்ளது என்று கால்நடை பராமரிப்பு துறை அறிவுறுத்தியுள்ளது.தமிழகத்தில் முல்லை,மருதம் நில மக்களுக்கு வாழ்வாதாரமாக மாடுகள் விளங்கின. தமிழர் வாழ்வில் மாடுகள் இரண்டற கலந்திருந்ததால் தமது விளையாட்டுக்களிலும் காளைகளை இணைத்துக் கொண்டனர். எனவே ஜல்லிக்கட்டு போன்ற வீரவிளையாட்டு பொங்கல் விழாவில் விமரிசையாக நடைபெற்று வருகிறது. தற்போது ஜல்லிக்கட்டு தடைநீங்கியதால் கிராம விவசாயிகள் காளைகளை தயார்படுத்தும் பணியில் மும்முரம் காட்டி வருகினறனர். இந்நாளில் காளைமாடுகள் உள்ளிட்ட கால்நடைகளுக்கு ஆர்வமிகுதியால் பொங்கல் உணவை சிலர் வழங்குவர். இவற்றை அளவாக கொடுக்க வேண்டும். மீறினால் கால்நடைகளுக்கு அமில நோய்(அசிடோசிஸ்) ஏற்படும்.இதுகுறித்து மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் ராஜேந்திரன் கூறியதாவது:

பொங்கலை கால்நடைகள் அதிகம் சாப்பிடும்போது ரூமன் எனப்படும் முதல்வயிற்றறையில் இருந்த உணவு புளித்துப்போய் ஏராளமான லேக்டிக் அமிலம் ஏற்பட ஏதுவாகிறது. லேக்டிக் அமிலம் ரத்தத்தில் கலக்கும் போது அமில நோய் ஏற்படும். மேலும் விசேஷ நாட்களில் அளவுக்கு அதிகமாக இனிப்புப் பண்டங்களையும் வழங்கக்கூடாது.மாவுச்சத்து அதிகம் உடைய இப்பொருட்களைச் சாப்பிடும் போது கடுமையான வயிறு உப்புசம் ஏற்பட்டு மூச்சு திணறலால் கால்நடைகள் இறக்க நேரிடும். கால்நடைகளை பொறுத்தளவில் வழக்கமான உண்ணும் தீவனங்களுக்கே தங்களை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளன. தீவனத்தில் ஏற்படும் திடீர் மாறுதல் ஆரோக்கிய கேடுகளை உருவாக்கி விடும். பொதுவாக தீவனத்தில் திடீர் மாறுதல் செய்யும் போது

குறைந்தளவாக கொடுத்து பின்னர் படிப்படியாக அதிகரித்தால் சம்பந்தப்பட்ட உணவு வகைகளுக்கு தம்மை தயார்படுத்திக் கொள்ளும்.அமில நோயால் பாதிக்கப்பட்ட மாடுகள் வயறு உப்புசம் அதிகமாவதால் அசை போடாது. உடல்நிலை மோசமாக பாதிக்கும். எனவே இந்நோய் கண்ட மாடுகளுக்கு சோடா உப்பு 300 கிராம் கொடுக்க வேண்டும். வாய் வழியாக டெட்ரா சைக்கிளின் மருந்துகளை கொடுக்கலாம். மேலும் பி காம்ப்ளக்ஸ் வைட்டமின் ஊசி மருந்தை மூன்றுநாள் செலுத்தியும் தொடர் சிகிச்சை அளிக்கலாம்.இதுபோன்ற நிலையைத் தவிர்க்க பொங்கல் பண்டிகையின் போது கால்நடைகளுக்கு பொங்கல் போன்ற உணவு வகைகளை 200 கிராம் மட்டுமே கொடுக்கலாம் எனறு அவர் தெரிவித்துள்ளார்.

**மானாவாரி நிலத்தில் பருத்தி விவசாயம் வேளாண்துறையினர் ஆலோசனை**

பழநி, : மானாவாரி நிலங்களில் பருத்தி விவசாயம் செய்யும்முறை குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். பணப்பயிர்களில் பருத்தி முதன்மை இடத்தில் உள்ளது. உலகளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியா 2ம் இடத்தில் உள்ள போதிலும், பருத்தியின் உற்பத்தியில் தமிழகத்தில் குறைவாகவே உள்ளது. தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் 70 லட்சம் பேல்கள் பஞ்சு தேவைப்படுகின்றன. ஆனால் தமிழகத்தில் அந்தளவிற்கு பருத்தி கிடைப்பதில்லை. இதன் காரணமாக வேளாண்துறையினர் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் பல நவீன சாகுபடி முறைகளை அறிமுகப்படுத்தி வருகின்றனர். இதுகுறித்து பழநி வேளாண்துறை அதிகாரிகள் கூறுகையில், 'தமிழகத்தில் குளிர்கால இறவைப் பருத்தி, மானாவாரிப் பருத்தி, இறவைப் பருத்தி, நெல் தரிசுப் பருத்தி என பருத்தி 4 பருவங்களில் பயிரிடப்படுகிறது. மானாவாரிப் பகுதிகளுக்கு கே 10, கே

11, கே.சி.2, கே.சி.3, எஸ்.பி.பி.ஆர் 3, எஸ்.வி.பி.ஆர் 4, எம்.சி.யு. 5, எம்.சி.யு. 12, பையூர் 1, எல்.ஆர்.ஏ.5166 ஆகிய ரகங்கள் சிறந்தவைகளாக கண்டறிப்பட்டுள்ளன. விவசாயிகள் கோடை உழவு செய்யும்போது நிலத்தின் சரிவுக்கு குறுக்காக உழவு செய்ய வேண்டும். இதனால் வழிந்தோடி வீணாகும் நீர் தடுக்கப்பட்டு உட்கிரகிக்கப்பட்டு விடும். மண்ணின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தொழுஉரம், மக்கிய குப்பை அல்லது ஆடுமாடுகள் கிடைபோடுதல் ஆகியவற்றை முறையே செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 12.5 டன் தொழுஉரம் இடுவதால், மண்ணின் தன்மை கெடடுவிடாமல் பருத்தியின் விளைச்சலை அதிகமாக பெறலாம். இதனால் மண்ணின் சேமிப்புத் திறனும் அதிகரிக்கின்றது. மண் பரிசோதனையின்படி உரம் இட வேண்டும். இல்லையெனில் பொதுப் பரிந்துரையின்படி ரகங்களுக்கு தகுந்தவாறு உரம் இட வேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட தழைச்சத்தில் பாதியையும், முழு அளவு மணிச்சத்தையும் அடியுரமாக இடவேண்டும். தொடர்ந்து நூண்ணட்ட கலவையை 12.5 கிலோவை சுமார் 40 கிலோ மணலுடன் கலந்து விதைச்சாலில் தூவ வேண்டும். மண் ஈரம் காக்கும் பொருட்டு மண் போர்வை அமைத்து பயிர் வறட்சியில் வாடுவதைத் தடுக்கலாம். பருத்தியில் அதிகப்படியான நீராவிப் போக்கைக் கட்டுப்படுத்த பராபின் என்ற மெழுகு பொருளை 1% என்ற அளவில் இலைகளில் தெளித்து நீராவிப் போக்கைக் குறைக்கலாம். காய்கள் நன்றாக வெடித்து வரும்போது ஒரு வார இடைவெளியில் பருத்தி அறுவடை செய்ய வேண்டாம். காலை 11 மணிக்குள் பருத்தி அறுவடைய முடித்துவிட வேண்டும். நன்கு வெடித்த பருத்தியை குவியலாகவும், பூச்சிகளினால் சேதமடைந்த பருத்தியை தனிக்குவியலாகவும் வைக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் வேளாண் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**ஆர்.எஸ்.மங்கலம் கண்மாய்க்கு வாராது வந்த வைகை தண்ணீர் மலர்தூவி மக்கள் வரவேற்பு**

ஆர்.எஸ்.மங்கலம், : ஆர்.எஸ்.மங்கலம் கண்மாய்க்கு வாராது வந்த வைகை தண்ணீரால் மகிழ்ச்சியடைந்துள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மலர் துாவி வரவேற்பு அளித்தனர்.தமிழகத்தின் இரண்டாவது பெரிய கண்மாய் என்று அழைக்கப்படும் ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாய் கடந்த பல ஆண்டுகளாக வறண்டு கிடந்தது. எதிர்பார்த்த பருவமழை கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தில் பெய்யாததால் வைகை அணை தண்ணீரை கேட்டு பெற முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இந்நிலையில் சமீபத்தில் பெய்த பருவமழை ஆர்.எஸ்.மங்கலத்தை தவிர்த்து மற்ற பகுதிகளில் போதுமான அளவிற்கு பெய்து கண்மாய், குளங்களை நிரப்பியது. மேலும் பெரும்பாலான அணைகளும் நிறைந்து மறுகால் செல்லும் அளவிற்கு தண்ணீர் இருந்து வந்தது.

இம்முறையும் ஆர்.எஸ்.மங்கலம் கண்மாய் தண்ணீர் இல்லாமல் வறண்டிருந்ததால் விவசாயிகள் விரக்தியடைந்தனர். பருவமழையால் கண்மாய் நிறையும் என்ற எதிர்பார்ப்பில் இப்பகுதியை சேர்ந்த 72 சிறு கண்மாய் பாசன விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் சாகுபடியை துவக்கியிருந்தனர். ஆனால் எதிர்பார்த்த மழை கண்மாய் பகுதியில் பெய்யாததால் ஏமாற்றம் அடைந்தனர். பிறபகுதிகளில் நல்ல மழை பெய்திருப்பதால் வைகை அணை தண்ணீரை ஆர்.எஸ்.மங்கலம் கண்மாய்க்கு திறந்த விட வேண்டுமென்று கடந்த மே மாதம் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் இவர்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால் ஒருநாள் மட்டும் வைகை அணை தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதையடுத்து தண்ணீர் ஆர்.எஸ்.மங்கலம் கண்மாய்க்கு குறைந்த அளவில் வந்து சேர்ந்தது. இதையடுத்து கண்மாய் நிறையும் வரை தண்ணீர் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் சாகுபடியை விவசாயிகள் துரிதப்படுத்தினர். ஆனால் ஒரே

நாளில் வைகை அணை அடைக்கப்பட்டதால் மீண்டும் கண்மாய் வறண்டது. இந்நிலையில் விவசாயிகளின் தொடர் கோரிக்கையை ஏற்று மீண்டும் வைகை அணை தண்ணீர் திறந்து விடப்பட்டதால் நேற்று அணை தண்ணீர் கண்மாய்க்கு வந்து சேர்ந்தது. இதை பார்த்து மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மலர் துாவி வைகை தண்ணீரை வரவேற்றனர். ஆரம்பத்திலேயே தண்ணீர் தொடர்ந்து திறந்து விடப்பட்டிருந்தால் கண்மாய் ஓரளவிற்கு நிறைந்திருக்கும். தற்போது ஈரப்பதம் இல்லாத நிலையில் தண்ணீர் வந்திருப்பதால் கண்மாய் நிலம் பாதியளவு தண்ணீரை உறிஞ்சி விடும். மீதமுள்ள தண்ணீரைத்தான் விவசாயத்திற்கு பயன்படுத்த முடியும். இந்த நிலையிலும் கண்மாய்க்கு தண்ணீர் வந்து சேர்ந்திருப்பது புதிய வளர்ச்சியின் துவக்கமாக கருதுவதாக விவசாயிகள் உற்சாகத்துடன் தெரிவித்தனர்.

இது குறித்து இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், வளர்ச்சியடைந்த பயிர்களை காப்பாற்றுவதற்காக டேங்கர் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி பயன்படுத்தி வந்தோம். தற்போது கண்மாய்க்கு தண்ணீர் வந்திருப்பது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலை அறுவடை வரை நீடிக்க வேண்டுமென்பதே அனைத்து விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது, என்றனர்.

**கூத்தன் கால்வாயை குளிர்வித்த ஆற்றுத்தண்ணீர் உற்சாகத்தில் துள்ளிக் குதித்த விவசாயிகள்**

பரமக்குடி.: பரமக்குடி வைகை ஆற்றிலிருந்து கூத்தன்கால்வாய்க்கு தண்ணீர் வந்து சேர்ந்ததால் உற்சாகமடைந்த பாசன விவசாயிகள் துள்ளி குதித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தினகரன் செய்தி எதிரொலியாக கூத்தன்கால்வாய்க்கு விமோச்சனம் கிடைத்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.பரமக்குடி வைகை ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டால் விவசாயத்திற்காக பார்த்திபனுார் மதகு அணையிலிருந்து வலது மற்றும் இடது பிரதான கால்வாய்களில் தண்ணீர் திறந்தவிடப்படும்.

இதன் தொடர்ச்சியாக கமுதக்குடி, பொதுவக்குடி, எஸ்.அண்டக்குடி,

விளத்துார் மற்றும் பாம்பூர் உள்பட 14 பஞ்சாயத்து கிராமங்கள் பாசன வசதி பெறக்கூடிய கூத்தன்கால்வாய் திறக்கப்படும். இதனால் 7 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செழித்து வந்தது. ஒவ்வொரு ஆண்டும் பரமக்குடி வைகை ஆற்று தண்ணீரை எதிர்பார்த்தே பாசன விவசாயிகள் தங்கள் பணியை தொடருவதா, வேண்டாமா என்பதை முடிவு செய்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த மாதம் வைகையாற்றில் தண்ணீர் திறந்துவிடப்பட்டபோது கூத்தன்கால்வாய் மூலம் பாசனவசதி பெற்று விவசாயம் செய்யும் தென்பொதுவக்குடி, மேலாய்குடி உள்பட கடைசி பாசனம் பெறும் பாம்பூர் கண்மாய்களுக்கு தண்ணீர் வராததால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர். இதையடுத்து வீணடிக்கப்பட்ட கூத்தன்கால்வாய் தண்ணீர், பாம்பூர் விவசாயிகள் விரக்தி என்ற தலைப்பில் தினகரன் நாளிதழில் படத்துடன் செய்தி வெளியிடப்பட்டது. இதன் எதிரொலியாக கடந்த 7 ம் தேதி வைகை அணையிலிருந்து ராமநாதபும் மற்றும் சிவகங்கை மாவட்ட பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அப்போது பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூத்தன்கால்வாய் வழியாக திறக்கப்பட்ட தண்ணீர் கடைமடை பாசனம் பெறும் பாம்பூர் கண்மாய்வரை தண்ணீர் செல்கிறதா என தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுவ ருகின்றனர். இதனால் பாம்பூர் கண்மாய்க்கு கடந்த 3 நாட்களாக தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் பாம்பூர் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து பாம்பூர் பாசன சங்க தலைவர் நாகசாமி கூறுகையில், கூத்தன்கால்வாயில் வரும் தண்ணீரை பிரித்து கொடுப்பதற்காக ஷட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஷட்டர்கள் சரிவர வடிவமைக்கப்படவில்லை. சரியான அளவில் கட்டாததால் கடைமடை பாசனம் பெறக்கூடிய விளைநிலங்கள் தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டன. இதுகுறித்து தினகரன் நாளிதழில் விரிவான செய்தி வெளியிடப்பட்டது. இதையடுத்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஜனவரியில் வைகை அணையிலிருந்து ராமநாதபுரம்

மாவட்ட பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும்போது பாம்பூர் கண்மாய்க்கு முதலில் தண்ணீர் சென்று சேரவேண்டுமென கூறினர். தற்போது எங்கள் பகுதிக்கு தண்ணீர் வந்து சேர்ந்திருப்பது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது, என்றார்.

**திருச்சுழி பகுதி விவசாயிகள் நுண்ணுயிர் பாசன திட்டத்தில் பயன்பெறலாம் வேளாண் அதிகாரிகள் ஆலோசனை**

திருச்சுழி, : திருச்சுழி பகுதியில் உள்ள விவசாயிகள் நுண்ணுயிர் பாசன திட்டத்தின் மூலம் பயன்பெற வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஆலோசனை.மாவட்டத்தில் மழை அதிகமாக பெய்த போதும் முறையாக சேமிப்பு இல்லாததால் மழைநீர் மண்ணில் நிலை நிறுத்த முடியவில்லை. இதனால் நீர்மட்டம் குறைந்து வருகிறது.கடந்த 10 வருடங்களுக்கு முன்பு 10 அடியிலும், 20 அடியிலும் கிடைத்த நிலத்தடி நீர் இன்று 400 அடிக்கும் கீழ் சென்றுள்ளது. முற்போகம் மழையை மட்டும் நம்பி விவசாயம் செய்த விவசாயிகள் இன்று ஒரு போகம் கூட முழுமையாக செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கிணறு உள்ள விவசாயிகள் கிணற்று நீர் குறைந்து வருவதால் சரியான காலங்களில் சாகுபடி செய்ய முடியவில்லை.கிராமப்புறங்களில் விவசாயத்தை மட்டுமே நம்பி உள்ள நிலையில் கிராமங்களின் வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதாரம் மிகவும் பின் தங்கியுள்ளன. இதனால் மாற்று தொழிலுக்கு விவசாயிகள் களம் இறங்கியுள்ளனர். இதனை தவிர்க்கவும், கிராமங்களின் விவசாயத்தை முன்னிலைப்படுத்தவும், விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பினை பெருக்கவும், வருமானத்தை உயர்த்தவும் நீர் பயன்பாடு பற்றி பல தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக சொட்டுநீர் பாசனம் போன்ற திட்டங்கள் விவசாயிகளின் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டு நீரின் சிக்கனத்தை வலியுறுத்தி குறைந்த பாசன நீர் சாகுபடி பரப்பளவு அதிகப்படுத்தவும் கூடுதல் மகசூல் பெறவும் நுண்ணீர் பாசன திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சொட்டுநீர் பாசனம் மூலம் சாகுபடி செலவு குறைந்து வருகிறது. களைகள் கட்டுப்படுத்தப்படுகிறது. நீர்

சேமிக்கப்படுகிறது. பாசன நீரில் கரையும் உரங்கள் கலந்து விடுவதால் உரச்செலவு குறைந்துவிடுகிறது. சத்துள்ள விளை பொருட்கள் கிடைக்கிறது.

இந்த திட்டம் சிறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்திலும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் செயல்பட்டு கொண்டிருக்கிறது. இத்திட்டங்களை பெறுவதற்கு கணினி பட்டா, காய்கறிகள், பழ மரங்கள், பூக்கள் மற்றும் ஏனைய தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்துள்ள அடங்கல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, ரேஷன்கார்டு ஜெராக்ஸ், மண் மற்றும் நீர் ஆய்வறிக்கை, சிறு விவசாய சான்று, நிலத்தின் வரைபடம் போன்றவைகளை கொடுத்து பயன்பெற திருச்சுழி வட்டார தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ஜெயலட்சுமி கேட்டுக் கொண்டார்.

**மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்**

புதுச்சேரி:கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் தொடர் கனமழை மற்றும் காற்றால் புதுவை, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதியில் 11,331 ஹெக்டேர் விவசாய பயிர்கள் சேதமடைந்தது. பாதிக்கப்பட்ட 15,189 விவசாயிகளுக்கு பயிர்சேத நிவாரண தொகையாக ரூ.22.09 கோடி வழங்கப்படும் என முதல்வர் ரங்கசாமி அறிவித்திருந்தார். இதன் முதற்கட்ட நிவாரண தொகையை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதல்வர் ரங்கசாமி நேற்று வழங்கினார். சபாநாயகர் சபாபதி, அமைச்சர்கள் தியாகராஜன், பி.ஆர்.சிவா, துணை சபாநாயகர் டிபிஆர்.செல்வம் மற்றும் வேளாண் அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, முதல்வர் ரங்கசாமி நிருபர்களிடம் கூறுகையில், புதுவை மாநிலத்தில் காற்று, கனமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் 15,189 பேருக்கு நிவாரண உதவிதொகை

வழங்க ரூ.22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக 2,479 விவசாயிகளுக்கு ரூ.2.66 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள விவசாயிகளுக்கு அவரவர் வங்கி கணக்கில் நிவாரணத்தொகை படிப்படியாக வரவு வைக்கப்படும் என்றார். கவர்னருடனான சந்திப்பு குறித்து கேட்டபோது, நிர்வாகம் சம்பந்தமாகவும், அனைத்து பிரச்னைகள் குறித்தும் பேசியதாக கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேகங்கள் பலவிதம்!



பார்ப்பதற்கு ஒரே மாதிரி தெரிந்தாலும், மேகங்களிலும் வகை வேறுபாடு உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா? அவை பற்றி... சிர்ரஸ் மேகங்கள்: இவை நம் பூமியில் இருந்து 8000 முதல் 11,000 மீட்டர் உயரத்தில் காணப்படுகின்றன. வெண்மையான இறகு போல, பஞ்சு போல பரவலாக இவை காணப்படும். வானில் உள்ள பனித்துளிப் பொருட்களால் இம்மேகம் உருவாகிறது. ஸ்ட்ரேட்டஸ் மேகங்கள்: இம்மேகங்கள் பூமியில் இருந்து 2400 மீட்டர் உயரத்தில் காணப்படுகின்றன. இவை பனிமூட்டம் அடுக்கு அடுக்காகப் படர்ந்து இருப்பது போலத் தோற்றம் தரும். லேசான மழைத் தூறல்

போடும்போது இவை தோன்றும். கியூமுலஸ் மேகங்கள்: இம்மேகங்கள்தான் பெரும்பாலும் நாம் காண்பவை. 1200 முதல் 1500 மீட்டர் உயரத்தில் இவை தோன்றும். வெண்ணிற மலைகள் போலவும், யானை போலவும், பல உருவங்கள் போலவும் தோற்றம் காட்டும். நிம்போ ஸ்ட்ரேட்டஸ் மேகங்கள்: இவைதான் மழை மேகங்கள். நீர் நிறைந்து இருப்பதால் கருப்பாகவும், இரவு நேரங்களில் சிலசமயம் வெளிறிய வண்ணமாகவும் தோன்றும். இவை பூமிக்கு மிக அருகில் இருக்கும். தமிழில் இவை கார்மேகம், கருமேகம், நீர்மேகம், நிறைமேகம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன.

**கிருஷ்ணா மேல் அணை திட்ட பணிகளுக்கு ரூ.30 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்படும் சித்தராமையா தகவல்**



பெங்களூரு,

முதல்-மந்திரி சித்தராமையா ராய்ச்சூர் மாவட்டம் தேவதுர்காவில் பல்வேறு அரசு நலத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு

நலத்திட்ட உதவிகளையும் வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

கிருஷ்ணா மேல் அணை திட்ட பணிகளுக்கு ரூ.30 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்படும். அடுத்த 2 ஆண்டுகளில் இந்த நிதி படிப்படியாக வழங்கப்படும். இதனால் பின்தங்கிய நிலையில் உள்ள இந்த பகுதி வளம் பெறும். திட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் முடிக்க அதிக நிதி தேவைப்படுகிறது. ராய்ச்சூர் மாவட்டத்தில் தரம் குறைந்த விதைகள் வழங்கப்பட்டதால் 35 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பருத்தி விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. தரம் குறைந்த விதைகளை விற்பனை செய்த தனியார் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு சித்தராமையா பேசினார். இந்த விழாவில் மருத்துவ கல்வி மந்திரி சரணபிரகாஷ் பட்டீல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பருத்தி சாகுபடி தொழில்நுட்பத்தை தெரிந்து கொள்ள பொள்ளாச்சி விவசாயிகளுக்கு வெளி மாநிலங்களில் பயிற்சி அட்மா திட்ட மேலாளர் தகவல்**



பொள்ளாச்சி

பருத்தி சாகுபடி தொழில்நுட்பம் குறித்து தெரிந்து கொள்ள பொள்ளாச்சி விவசாயிகள் வெளி மாநிலங்களுக்கு அழைத்து சென்று பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக அட்மா தொழில்நுட்ப மேலாளர் சண்முக பிரியா தெரிவித்தார்.

<u>அட்மா கூட்டம்</u>

பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) கூட்டம் மீன்கரை ரோட்டில் உள்ள உழவர் மையத்தில் நேற்று நடைபெற்றது. இதற்கு வடக்கு ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குனர் உமா ராணி தலைமை தாங்கினார். வடக்கு ஒன்றிய குழு துணைத்தலைவர் ரத்தினகுமார் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் அட்மா திட்டம் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து விளக்கப்பட்டன. இதுகுறித்து அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சண்முக பிரியா கூறியதாவது:– பருத்தி சாகுபடி தொழில்நுட்பம் குறித்து தெரிந்து கொள்ள பொள்ளாச்சி பகுதி விவசாயிகள் 20 பேரை வெளி மாநிலங்களுக்கு அழைத்து சென்று பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்த பயிற்சி 7 நாட்களுக்கு அளிக்கப்படும்.

<u>விவசாயிகளுக்கு பயிற்சி</u>

இதேபோல் நிலக்கடலை, எள் சாகுபடி குறித்து 50 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அழைத்து சென்று 2 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. வயல்வெளி பள்ளி மூலம், நிலக்கடலை சாகுபடியில், விதை முதல் அறுவடை வரையிலான தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள 25 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

மேலும் உளுந்து, பாசிப்பயிறு சாகுபடி குறித்து, 25 விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. இவ்வாறு விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் இந்த திட்டத்தின் கீழ், பயிர்வகை மற்றும் எண்ணெய் வித்து பயிர்கள், சிறுதானிய பயிர்கள், அனைத்து வகை பயிர்கள்,

காய்கறி சாகுபடி, நாட்டு மாடுகள் வளர்ப்பு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு, சொட்டுநீர் பாசனம் குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சகாப்தீன், பட்டு வளர்ச்சி துறை அலுவலர் நெல்லை முருகன், வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் சுரேந்திரன், அட்மா வட்டார தொழில்நுட்ப உதவி மேலாளர்கள் உமா ஷாலினி, நாகராஜ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு நீர்மட்டம் 81 அடியாக குறைந்தது**



மேட்டூர்

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. நீர்மட்டம் 81 அடியாக குறைந்தது.

மேட்டூர்அணை

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக கடந்த 2 வார காலமாக வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்தநிலையில் அணைக்கு நீர்வரத்து மிகவும் குறைந்து உள்ளது.

எனினும் தண்ணீர் திறப்பு 15 ஆயிரம் கனஅடியாக நீடித்து வந்ததால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து கொண்டே வந்தது. தண்ணீர் திறப்பு குறைப்பு இந்தநிலையில் டெல்டா பாசன பகுதிகளில் தண்ணீரின் தேவை குறைந்து உள்ளது. எனவே, நேற்று மாலை 6 மணி முதல் காவிரி டெல்டா பாசனத்துக்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடியில் இருந்து 12 ஆயிரம் கனஅடியாக குறைக்கபட்டுள்ளது. ஆனால், கால்வாய் பாசனத்துக்கு தொடர்ந்து வினாடிக்கு 400 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அணைக்கு வினாடிக்கு 134 கனஅடி வீதம் தண்ணீர் வருகிறது. தண்ணீர் திறப்பைவிட நீர்வரத்து குறைவாக உள்ளதால் அணையின் நீர்மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 81.36 அடியாக குறைந்தது.

**மேட்டூர் 16 கண்பாலத்திற்கான மாற்றுப்பாலம் இன்னும் 15 நாட்களில் திறக்கப்படும் அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி தகவல்**



மேட்டூர்

மேட்டூர் 16 கண் பாலத்திற்கான மாற்றுப்பாலம் இன்னும் 15 நாட்களில் திறக்கப்படும் என்று அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி பேசினார். மின்சாதன பொருட்கள் வழங்கும் விழா மேட்டூர் அனல்மின்நிலையம் 4 ரோடு ரவுண்டானா அருகே, தமிழக அரசின் விலையில்லா மின்சாதன பொருட்கள் வழங்கும் விழா நடந்தது. விழாவிற்கு மாவட்ட கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். மேட்டூர் நகர்மன்ற தலைவர் லலிதா சரவணன் முன்னிலை வகித்தார். மேட்டூர் உதவி கலெக்டர் மேகநாத ரெட்டி வரவேற்று பேசினார். இதில் அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி கலந்துகொண்டு 10 ஆயிரம் பயனாளிகளுக்கு விலையில்லா மின்சாதன பொருட்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:- 2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின்போது முதல்-அமைச்சர் ஜெயலலிதா அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார். இதன் அடிப்படையில் தமிழகத்திலுள்ள 1 கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா மின்சாதன பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேட்டூரில் 89 ஆயிரத்து 735 பயனாளிகளுக்கு முழுமையாக மின்சாதன பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாலம்திறக்கப்படும்

தொப்பூர்-பவானி சாலையை 4 வழிச்சாலையாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது உலக வங்கி திட்டம் என்பதால் சாலை அமைப்பதற்குரிய நிலங்களை கையகப்படுத்தும் பணி நடைபெற்றது. இதில் 80 சதவீத பணிகள் நடைபெற்றுள்ளது. 16 கண் மதகு பாலத்திற்கு மாற்று பாலம் அமைக்கும் பணி டெண்டர் விடப்பட்டு வேகமாக பணிகள் செயல்படுத்தப்பட்டு நிறைவடையும் நிலையில் உள்ளது. இன்னும் 15 நாட்களில் இந்த பாலத்தை முதல்-அமைச்சர் திறந்து வைப்பார். ஆகவே அறிவித்த திட்டங்களை தவறாமல் நிறைவேற்றி வருவது தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா அரசு தான் என்பது அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி பேசினார். இதில் முன்னாள் நகர் மன்ற தலைவர் கந்தசாமி, மேட்டூர் நகர கூட்டுறவு வங்கி தலைவர் சந்திரசேகரன், மேட்டூர் நகர்மன்ற துணைத்தலைவர் ராமகிருஷ்ணன், அ.தி.மு.க. மாவட்ட அவைத்தலைவர் குருசாமி உள்பட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். இதே போல் மேட்டூர் வைதீஸ்வரா மேல்நிலைப்பள்ளியிலும் விலையில்லா மின்சாதன பொருட்கள் வழங்கும் விழா நடந்தது. இதில் மேட்டூர் நகராட்சி 1-வது வார்டு முதல் 9-வது வார்டு வரை உள்ள பயனாளிகளுக்கு மின்சாதன பொருட்களை அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி வழங்கினார். இதில் வீரக்கல்புதூர் பேரூராட்சி தலைவர் எமரால்டு வெங்கடாசலம், கூட்டுறவு வங்கி தலைவர்கள் விஜயராகவன், வக்கீல் ஜெயக்குமார், அண்ணா தொழிற்சங்கத்தை சேர்ந்த ஸ்டாலின், அரங்கசாமி உள்பட பலர் கலந்துகொண்டனர்

**தேவகோட்டை பகுதியில் விளைந்த பயிர்களை வேளாண் விஞ்ஞானிகள், அதிகாரிகள் ஆய்வு**



தேவகோட்டை பகுதியில் உள்ள கிராமங்களில் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் அதிகாரிகள் வயல் வெளிகளில் ஆய்வு செய்து நெல்பயிரை தாக்கும் நோய்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினர்.

அதிகாரிகள்ஆய்வு

தேவகோட்டை வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் அரியனேந்தல், இருமதி, ஓலக்குடியேந்தல், பனங்குளம் ஆகிய கிராமங்களில் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் இணைந்து வயல் ஆய்வு செய்தனர். அப்போது அவர்கள் அந்தந்த பகுதி விவசாயிகளுக்கு நெல்லில் ஏற்படும் நோய்கள் குறித்தும், அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் எடுத்துக் கூறினர்.

இந்த ஆய்வின் போது தேவகோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரமணியன் கூறியதாவது:- பனிமூட்டமான சூழ்நிலை காரணமாக நெல்லில் இலைச்சுருட்டு புழு தாக்குதலுக்கு வாய்ப்புஉள்ளது. இளம்பயிர்கள், தூர்பிடிக்கும் பருவத்தில் உள்ள பயிர்களை தாக்கும் இலைச்சுருட்டு புழுக்கள் இலைகளை உள்பக்கமாக சுருட்டி உள்ளிருந்து பச்சையத்தை சுரண்டி உண்ணுகின்றன. இந்த தாக்குதல் அதிகமானால் செடிகள் காய்ந்து விடும். இந்த பூச்சிகளின் தாக்குதல் இருக்கும் சமயம் தழைச்சத்து உரங்களை வயலில் இடுவதை குறைக்க வேண்டும். வயலில் இந்த புழுவின் அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கவர்ந்து அழிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

குலைநோய்

ஆய்வின்போது குன்றக்குடி வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் விமலேந்திரன் குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். இந்த ஆய்வில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சூர்யா, உதவி வேளாண்மை அலுவலர்கள் முருகானந்தம், சிக்கந்தர்பாட்ஷா, தியாகராஜன், ராமசாமி உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சரவணன், பாலமுருகன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**ஜல்லிக்கட்டில் களம் இறங்க காளைகளுக்கு தீவிர பயிற்சி**



பொங்கல் திருவிழாவின் போது நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிக்காக காளைகளுக்கு திருப்பத்தூர் அருகே தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சி

திருப்பத்தூர் அருகே நெடுமறம் கிராமத்தில் ஜல்லிக்கட்டுக்கு காளைகள் தயாராகி வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளாக ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டதால் ஜல்லிக்கட்டு காளைகள் அடி மாட்டுக்கு விற்பனை செய்யப்பட்டன. இது ஒருபுறம் இருந்தாலும் ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் தொடர்ந்து காளைகளை வளர்த்து வந்தனர்.தற்போது மத்திய அரசு இந்த பொங்கல் திருநாள் அன்று ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்கியதை அடுத்து காளைகளின் உரிமையாளர்கள் அவைகளுக்கு தீவிரபயிற்சி அளித்து வருகின்றனர். சிலர் புதிதாக காளை வாங்கி உள்ளனர். இதில் விலைக்கு ஜல்லிகட்டு காளை கிடைக்காமல் பலர் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.தற்போது நெடுமறம் கிராமத்தில் உள்ள ஜல்லிக்கட்டு காளைகளுக்கு அதன் உரிமையாளர்கள்

நீச்சல் பயிற்சி அளிப்பது, கொம்பு குத்த வைத்தல், கொம்பு சீவுதல், திறந்த வெளியில் கயிறு மூலம் காளையை கட்டி வைத்து அதை மாடுபிடி வீரர்கள் பிடிப்பது உள்ளிட்ட பயிற்சிகள் அளித்து காளைகளை தயார் படுத்திவருகின்றனர்.

பாரம்பரியம்

இதுகுறித்து நெடுமறம் கிராமத்தைச் சேர்ந்த காளையின் உரிமையாளர் இளங்கோ கூறியாவது:- நாங்கள் பாரம்பரியமாக தொன்றுதொட்டு ஜல்லிக்கட்டு காளைகள் வளர்த்து வருகிறோம். பல்வேறு மாடுகள் எங்களிடம் இருந்தாலும் இந்த ஜல்லிக்கட்டு காளைகளுக்கு தனி கவனிப்பு உண்டு. இந்த காளைகளுக்கு வயிறு பெருக்காமல் இருக்க ஊருணி அல்லது கண்மாயில் நீந்த விட்டு பின்னர் பருத்திக்கொட்டை உணவாக கொடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல் பழங்கள், தேங்காய் மற்றும் வெல்லம், பச்சரிசி கொடுத்து உடலை வலுப்படுத்துவோம். இதனால் இந்த காளையை எந்த ஊரில் அவிழ்த்து விட்டாலும் நாங்கள் வீடு வருவதற்கு முன்பு எங்கள் காளை எங்கள் வீட்டிற்கு வந்து விடும். கடந்த 2 ஆண்டுகளாக இந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறாமல் இருந்ததால் எங்களுக்கு வருத்தமாக இருந்தது மட்டுமல்லாமல் விவசாயம் இருந்தும் இல்லாதது போல் இருந்தது. இதை எங்க ஊரின் சாமி குத்தம் என்று சிலர் குறிப்பிடுகின்றனர். தற்போது ஜல்லிக்கட்டு அறிவித்ததால் எங்கள் ஊரில் விவசாயம் செழிக்கும் என்று நம்பிக்கை பிறந்துள்ளது. மேலும் எங்கள் ஊரில் நடைபெறும் இந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி கோவில் திருவிழாக்களில் நடைபெறும். அன்றை தினம் எங்களது உறவினர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து விருந்து சாப்பிட்டு செல்வார்கள். இதனால் எங்களது உறவுத்தன்மை நீடிக்க செய்வதற்கு பாலமாக இருப்பது இந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி தான். எனவே இந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி ஆண்டாண்டு காலத்திற்கு எந்தவித தடையும் இல்லாமல் நடத்த மத்திய, மாநில அரசுகள் உதவி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தஞ்சைக்கு கரும்பு, மஞ்சள்கொத்து வரத்து அதிகரிப்பு கடந்த ஆண்டை விட வாழைத்தார் விலையும் குறைந்தது**



தஞ்சாவூர்

பொங்கல் பண்டிகையையொட்டி தஞ்சைக்கு கரும்பு, மஞ்சள் கொத்து வரத்து அதிகரித்துள்ளது. மேலும் வாழைத்தார் விலை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைந்துள்ளது. பொங்கல் பண்டிகை தமிழர்களின் பண்டிகைகளுள் முக்கியமான பண்டிகை பொங்கல் பண்டிகை. விவசாயிகள் பொங்கல் பண்டிகை அன்று புத்தாடை உடுத்தி புதுப்பானையில் பொங்கலிட்டு கொண்டாடுவார்கள். இந்த பொங்கல் பண்டிகையில் முக்கிய இடத்தை பிடித்து இருப்பது கரும்பு, மஞ்சள் கொத்து, வாழைப்பழம் தான். பொங்கல் பண்டிகை தொடங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்னதாகவே கரும்புகள் விற்பனைக்கு வந்து விடும். மஞ்சள் கொத்து, இஞ்சிகொத்து, வாழைத்தார் போன்றவை ஒரு வாரத்திற்கு முன்னதாக விற்பனைக்கு வரும்.

பொங்கல் பண்டிகையின்போது புதுமணத்தம்பதிகளுக்கு சீர் வரிசையாக பொங்கல் வைப்பதற்கு தேவையான பொருட்கள், கரும்பு, மஞ்சள் கொத்து, வாழைத்தார் போன்றவைகளை கொடுப்பார்கள். தஞ்சை காமராஜர் மார்க்கெட்டிற்கும் கரும்பு, வாழைத்தார், மஞ்சள்கொத்து வரத்து தற்போது அதிகரித்துள்ளது. பொங்கல்பண்டிகைக்கு இன்னும் 4 நாட்களே இருப்பதால் தற்போது விற்பனை அதிகரிக்க தொடங்கி விட்டது.



கரும்பு

தஞ்சை காமராஜர் மார்க்கெட்டிற்கு கல்யாணபுரம், திருக்காட்டுப்பள்ளி, பூதலூர், சூரக்கோட்டை போன்ற பகுதிகளில் இருந்து கரும்பு அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு கொண்டு வந்து குவித்து வைக்கப்பட்டுள்ளன. தற்போது 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ.250 முதல் ரூ.270 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கரும்பு மட்டும் கேட்டால் ரூ.30-க்கு விற்பனை செய்யப்படுகிறது

இதே போல் தஞ்சை சிவகங்கைப்பூங்கா, மருத்துவகல்லூரி சாலை, உழவர் சந்தை, கீழவாசல், நாகை சாலை, மாரியம்மன் கோவில் சாலை உள்பட பல்வேறு பகுதிகளிலும் கரும்புகள் அதிக அளவில் குவித்து

வைக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகின்றன. .
மஞ்சள்கொத்து

இதே போல் மஞ்சள்கொத்து வரத்தும் அதிகமாக உள்ளது. தஞ்சை காமராஜர் மார்க்கெட்டில் ஒரு மஞ்சள் கொத்து ரூ.25 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு ரூ.20 முதல் விற்பனை செய்யப்பட்டது. இதே போல் கீழவாசல் கடைவீதி பகுதியிலும் மஞ்சள் கொத்து விற்பனை செய்யப்படுகிறது. இருப்பினும் விற்பனை கடந்த ஆண்டைப்போலவே அதிகரித்துள்ளது. தஞ்சைக்கு திருவையாறு, நடுக்காவேரி, தாராசுரம், சுவாமிமலை போன்ற பகுதிகளில் இருந்து மஞ்சள்கொத்து விற்பனைக்கு வந்துள்ளன. இது தவிர மக்கள் மஞ்சள் கொத்துடன், இஞ்சிகொத்தும் வாங்குகிறார்கள். இந்த இஞ்சிக்கொத்து ஒன்று ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது.
வாழைத்தார்

ஆனால் வாழைத்தார் விலை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சற்று குறைந்துள்ளது. வாழைத்தார் ஒன்று ரூ.200 முதல் விற்பனை செய்யப்படுகிறது. நல்ல வாழைத்தார் ரூ.300 முதல் விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு வாழைத்தார் ரூ.400 முதல் ரூ.500 வரை விற்பனை செய்யப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு, அய்யம்பேட்டை, நடுக்காவேரி போன்ற பகுதிகளில் வாழைத்தார் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றது. ஆனால் இந்த பகுதியில் விளையும் வாழைத்தாரை விட தூத்துக்குடி பகுதியில் விளையும் வாழைத்தாருக்குத்தான் தனி மவுசு உள்ளது. தஞ்சை காமராஜர் மார்க்கெட்டிற்கு தூத்துக்குடியில் இருந்து தான் வாழைத்தார் அதிக அளவில் விற்பனைக்கு வருகின்றன. இந்த வகை வாழைத்தாரை தான் பொதுமக்களும் அதிக அளவில் வாங்கி செல்கிறார்கள்.

கடந்த ஆண்டை விட குறைவு கடந்த ஆண்டு 1 லோடு லாரி வாழைத்தார் ரூ.1 லட்சத்து 70 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது. ஆனால் தற்போது 1 லோடு வாழைத்தார் ரூ.1 லட்சத்து 30 ஆயிரத்துக்கு விற்பனை

செய்யப்படுகிறது. ஒரு லோடு லாரியில் 500 முதல் 550 வாழைத்தார்கள் இருக்கும். வாழை வெட்டி ஏற்றுக்கூலி, இறக்குகூலி மற்றும் லாரி வாடகை தனி. தற்போது தஞ்சை காமராஜர் மார்க்கெட்டில் சிறிய வாழைத்தார் ரூ.200-க்கு விற்பனை செய்யப்படுகிறது. பெரிய வாழைத்தார் ரூ.400 வரை விற்பனை செய்யப்படுகிறது.

விற்பனைமந்தம்

இது குறித்து வாழைத்தார் மொத்த வியாபாரி பத்மநாபன் கூறுகையில், " கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வாழைத்தார் விலை குறைந்துள்ளது. தற்போது ரூ.200 முதல் ரூ.400 வரை வாழைத்தார் விற்பனை செய்யப்படுகிறது. தூத்துக்குடியில் இருந்து வழக்கமாக தஞ்சை மார்க்கெட்டிற்கு தினமும் 2 லாரி வாழைத்தார் விற்பனைக்கு வருகிறது. தஞ்சையில் இருந்து தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், மன்னார்குடிக்கும் வாழைத்தார் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு பகுதிகளில் இருந்தும் வாழைத்தார் விற்பனைக்கு வருகிறது. ஆனால் தூத்துக்குடியில் இருந்து வரும் வாழைத்தார்களுக்குத்தான் தனி மவுசு உள்ளது. தற்போது வாழைத்தார் விற்பனையும் வெகுவாக குறைந்துள்ளது."என்றார்.

கோவில்பட்டி, ஏரலில் பொங்கல் பொருட்கள் விற்பனை மும்முரம்





கோவில்பட்டி

கோவில்பட்டி, ஏரலில் பொங்கல் பொருட்கள் விற்பனை மும்முரமாக நடந்துவருகிறது.

கரும்பு,மண்பானை

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை வருகிற 15-ந் தேதி கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மதுரை மேலூர் பகுதிகளில் இருந்து கரும்பு கட்டுகள் லாரிகளில் கோவில்பட்டிக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. கோவில்பட்டி மெயின் ரோடு, எட்டயபுரம் ரோடு பகுதிகளில் 15 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ.300 முதல் ரூ.350 வரையிலும், ஒரு



கரும்பு

ரூ.25 முதல் ரூ.30 வரையிலும் தரம் வாரியாக விற்பனை செய்யப்படுகிறது.

நெல்லை, மானாமதுரை, சிவகாசி பகுதிகளில் இருந்து மண்பானைகள்

கோவில்பட்டிக்கு கொண்டு வரப்பட்டு, ஒரு மண்பானை ரூ.60 முதல் ரூ.80 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

பனங்கிழங்கு

கழுகுமலை, பழவூர் பகுதிகளில் இருந்து பொங்கல் வைக்க பயன்படுத்தும் அடுப்பு கல் கொண்டு வரப்பட்டு, ஒரு கல் ரூ.40 முதல் ரூ.50 வரையிலும் விற்பனைசெய்யப்படுகிறது.

10 பனங்கிழங்குகள் கொண்ட ஒரு கட்டு ரூ.30-க்கும், 15 பனங்கிழங்குகள் கொண்ட ஒரு கட்டு ரூ.40-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அவற்றை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர்.



ஏரல்

தேனி மாவட்டத்தில் இருந்து ஏரல் பகுதிகளுக்கு லாரிகளில் கரும்பு லோடு கொண்டு வரப்பட்டு உள்ளது. ஏரல் காந்தி சிலைஅருகில், சினிமா தியேட்டர் அருகில் 15 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ.400 முதல்

ரூ.450 வரையில் விற்பனை செய்யப்படுகிறது. அவற்றை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி சென்றனர்.